தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 கும்பம் 15 (27 - 2 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 13 | பகுதி 16-17

★ நெல்லை உ.த.மு.க. அமைப்பு மாநாடு மிகச் சிறப்பாக நடந்தேறியது!

★ கருத்தரங்கம், பாட்டரங்கம், பட்டிமன்றம் முதலியவை திட்டமிட்டபடி எழுச்சியுடன் நடந்தன!

★ கழகப் பொறுப்பாளர்கள் இரவு பகலென்று பாராமல் உழைத்து மாநாடு வெற்றிபெற உதவினர்!

★ பாவலரேறு அவர்களின் உணர்வும் அறிவும் நிறைந்த சிறப்புரை அனைவர்க்கும் புத்துணர்வு ஊட்டியது!

மாநாடு பற்றி நம் சிறப்புச் செய்தியாளர் தரும் தகவல்கள்!

திருநெல்வேலி — பிப்: 20:

திட்டமிட்டபடி கடந்த கும்பம் 8 (20-2-83) ஞாயிறு காலை 10மணி முதல், திருநெல்வேலி நகரில் உள்ள பாரதியார் தெரு, காமாட்சி திருமண மண்டபத்தில், உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தின், திருநெல்வேலி (தெற்கு, வடக்கு) மாவட்ட அமைப்பு மாநாடு மிகச்சிறப்பாகவும், அதே பொழுது பயனுடைய வகையிலும் நடந்து முடிந்தது. அண்டை அயலூர்களிலிருந்தும், மதுரை, திருச்சி, தஞ்சை போலும் வெளி மாவட்டங்களிலிருந்தும் தென்மொழி, தமிழ் நிலம், உ.த மு.க. அன்பர்கள் அறிஞர்கள் ஆதரவாளர்கள் ஆகியோர் திரளாக வந்திருந்து மாநாட்டைச் சிறப்புற நடத்திக் கொடுத்தனர்.

மாநாட்டுக் குழுத்தலைவரும், நெல்லை வடக்கு மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளரும் ஆகிய த. கரிகாலன் அவர்கள், தெற்கு மாவட்டச் செயலாளர் இராவணன், வடக்கு மாவட்டச் செயலர் அ. தமிழன்பன் ஆகியோரும் மற்றும் தெற்கு, வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்கள், இ. தூய அன்பறிவன், செ. இப்பாரரசு, மாநாட்டுச் செயலர் சிவந்தி பொற்செழியன், இரா. பாண்டியன், சங்க. தமிழ்ச்செல்வன் முதலியோரும் மாநாடு சிறப்புற நடைபெறுவதற்குப் பெரிதும் உழைத்தனர்.

நகரெங்கும், வெளியூர், உள்ளூர் பேருந்துகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப் பெற்றுத் தட்டிகள் வைக்கப் பெற்றிருந்தன. மாநாட்டை ஒட்டி பகுதிச் சாலைகளிலும், நகர நுழைவிலும் வரவேற்புப் பதாகைகள் கட்டப் பெற்றிருந்தன. இவையன்றித் தனிப்பட்ட அறிக்கைகள், அழைப்புகள் ஏராளமாக அனுப்பப் பெற்றிருந்தன.

மாநாட்டில் கலந்துகொள்வதற்காகக் கழக முதல்வர் **பாவலரேறு** அவர்கள், தம் ஏழு நாள் தென் மாவட்டச் சுற்றுச் செலவை முடித்துக்கொண்டு 20-2-85 காலையிலேயே நகருக்கு வந்து தங்கியிருந்தார்.

சரியாக, காலை 10-30 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன், மாநாடு சிறப்புறத் தொடங்கியது. காலை கருத்தரங்கம் தூய யோவான் கல்லூரிப் பேராசிரியர் பா. வளனரசு க.மு அவர்கள் பகல் பாட்டரங்கம், தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரிப் பேராசிரியர் அ. செகதீசன் க.மு. அவர்கள் தலைமையிலும், மாலை பட்டிமன்றம், தென்காசி வழக்கறிஞர் திரு. பாண்டி வளவன் அவர்கள் தலைமையிலும் சிறப்பாக நடைபெற்றன.

மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக, பாவலரேறு அவர்களின் சிறப்புரை மாலை 8 மணியளவில் ஏறத்தாழ 3½ மணி நேரம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நெல்லை மாவட்ட தெற்குப் பகுதி அமைப்பாளர் புலவர் சிவசங்கு அவர்கள் தலைமையேற்றார். பேரா. மு. செ. அறிவரசன் முதலியோர் கழகத்தையும் முதல்வரையும் வாழ்த்தி உரை நிகழ்த்தினர். (முழு உரையும் பின்னர் வரும்)

சரியாக இரவு 12-15 மணியளவில், தமிழின ஒருங்கிணைப்புப் பாடலுடன் மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது. விரிவான செய்திகள் அடுத்த இதழில் வெளிவரும்.

அறிவிப்பு

கடுமையான மின் தடங்களாலும், சில அலுவலக நடைமுறைச் சிக்கலாலும், இதழ்—காலந் தாழ்ந்து வெளிவந்து கொண்டிருப்பதை அன்பர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறோம். நிலைமை விரைந்து சரி செய்யப்பெறும்.

—அமைச்சர்.

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய [illegible] துறைகளிலும்
உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

★ பழைய பகல் உணவுத் திட்டமும் புதிய ஊட்ட உணவுத் திட்டமும்

★ ஆசிரியரின் உண்மைச் சிக்கல் என்ன ?

★ இதோ அரிய விளக்கம்! படிப்பீர், சிந்திப்பீர்.

''பழைய பகல் உணவுத் திட்டத்தில் ஆசிரியரே சமைத்தனர். புதிய திட்டத்தில் ஆயாக்கள் சமைக்கின்றனர்''. இது, கல்வி அமைச்சரின் கூற்று. ஆம். முற்றிலும் உண்மை. இருந்தும், ஆசிரியர்கள் ஏன் போராடுகின்றனர்? சிந்திக்க வேண்டாமா நாம்!

பழைய திட்டம்

1. பள்ளிப் பதிவில் 1/3 பங்கினருக்கே உணவளிக்கப்பட்டது.
2. ஆண்டில் 200 நாட்களுக்கு மட்டுமே உணவளிக்கப்பட்டது.
3. மாதம் முழுதும் பயன்படுத்த 'கேர்' நிறுவன எண்ணெய் வழங்கப்பட்டது.
4. பாதி நாட்களுக்கு கேர் நிறுவனக் கோதுமை வழங்கப்பட்டது.
5. மீதி நாட்களுக்குப் பையனுக்குப் 15 காசு மேனி தரப்பட்ட பணத்திலிருந்து அரிசி வாங்கிச் சமைத்துப் போடப்பட்டது.
6. விலைவாசியைப் பொறுத்து அரிசியின் அளவு கூடவோ குறையவோ செய்யும். அரிசி, காசுக் கணக்கே தவிர, கிலோ கணக்கன்று.
7. உணவுப் பொருள்களான கேர் எண்ணெய், கோதுமை கொடுக்கப்பட்டதில் அளவுகள் குறைவுபடுவதில்லை. முத்திரையிட்டபடி கொடுக்கப்பட்டது.
8. முதல் பட்டியலில் மாணவர் வருகை போதவில்லை எனில், துணைப்பட்டியல் வைத்து நிறைவு செய்து கொள்ளலாம்.
9. காய்கறிகள் வாங்குதல் கட்டாயம் அன்று. முடிந்தால் போடலாம்.
10. மாதத்தில் ஒரு நாள் மட்டும் அலுவலகம் சென்று 'கேர்' பொருள்கள் பெற்று வந்தால் போதும். வேறு போக்குவரத்துச் செலவில்லை.

புதிய திட்டம்

1. எல்லா மாணவருக்கும் உணவு; ஆண்டின் எல்லா நாளிலும் உணவு.
2. அரிசி, பருப்பு, எண்ணெய் அரசு கொடுக்கிறது.
3. விறகு, காய்கறி, மளிகை வாங்க மாணவனுக்கு 11 காசு மேனி அரசு கொடுக்கிறது.
4. 'கேர்' நிறுவனம் கொடுக்கும் கோதுமை மற்றும் எண்ணெயை அரசு குறிப்பிடும் நாளில் மட்டும் பயன்படுத்த வேண்டும்.

சொல்லச் சுருக்கமாக இருக்கிறது. பகல் உணவு ஊட்ட உணவாகிறது. இதில் ஆசிரியருக்கு வந்த இக்கட்டு என்ன? ''முன்பும் பகல் உணவு போட்டு வந்தார்களே, அதுவும் அவர்களே செய்து போட்டு வந்தார்களே, நாங்கள் தாம் இப்போது 2 ஆயாக்கள் வைத்து ஆக்கிப் போடச் சொல்கின்றோமே, என்ன குறை? அவர்களுக்கு,'' என அரசு கேட்கிறது.

அறியா மக்கள், இதுவே உண்மை என நம்பி 'ஆமாம்-ஆமாம், இந்த ஆசிரியர்கள் செய்வது சரியில்லை' என நினைக்கும்படியாகச் செய்கின்றது. ஆசிரியர்களின் சிக்கல்கள் ஒருபுறம் இருக்கட்டும்.

அரசு மக்களுக்கு ஊட்ட உணவுத் திட்டம் பற்றிக் கொடுத்த விளக்கத்தைப் பாரீர்!

எல்லாக் குழந்தைகளுக்கும் உணவு. காட்டில், மேட்டில் வேலை செய்தாலும் பள்ளியில் பகல் உணவு உண்டு.

நாட்டு மக்களே உண்மை அதுவன்று. அது பெரும் புரட்டு. ஏமாற்று. உண்மை உறங்குகிறது. இதோ பாருங்கள்

பள்ளிப் பிள்ளைகள் எல்லாருக்கும் உணவில்லை. பத்து அகவைக்கு உட்பட்டோருக்கே பகலுணவு. அதுவும் பள்ளிக்கு வருகை தந்தாலே பகலுணவு.

இத்தகு நிலையில் ஆசிரியருக்கு ஏற்படுகிற சிக்கல்கள்.

1. அரசு அறிவிப்புப்படி எல்லாப் பிள்ளைகளுக்கும் உணவளிக்க வேண்டும். ஆனால், 10 அகவைக்கு மேற்பட்டோருக்கு உணவில்லை சட்டத்தில். ஆனால் போட்டாக வேண்டும். நடைமுறையில் எப்படி ? பள்ளி வந்த 10 அகவைக்கு உட்பட்ட பிள்ளைகளில் பல பேர் ஊட்ட உணவு உண்ணாமல் வீடு சென்று விடுவர். அவர்களைக் கணக்கில் வைத்து இவர்களுக்கு 10 அகவைக்கு மேற்பட்டோருக்கு உணவளிக்க வேண்டும். கேட்டால் அரசு அப்படிச் சொல்லவில்லை என்பர். சட்டப்படி 10 அகவைக்கு மேற்பட்ட உண்ண விரும்பும் பிள்ளைகளை நிறுத்தினால் பள்ளியில் சோறு சரியாகப் போடுவதில்லை என்பது போல் உள்ளூரில் ஆசிரியருக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இதனால் கணக்குகளில் சில சரிக்கட்டல்கள் செய்ய வேண்டியுள்ளது.

2. அரசு, தேவையான பொருள்களான அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகிய இவற்றை உணவு வழங்கு துறையின் மூலமாகப் பள்ளிகளுக்கு வழங்குகிறது. இதில் பல நடைமுறைத் தவறுகள் நடந்து கொண்டே இருக்கின்றன. 1 மூட்டை அரிசியில் 3 கி.கி, 1 மூட்டை பருப்பில் 4 கி.கி குறைவுபடுகிறது. எண்ணெய் தகரத்தில் முத்திரை இட்டாற் போல் தருவது இல்லை. சில்லறையில் அளந்து ஊற்றுகிறார்கள். இதில் 1/10 பங்கு உண்மையாகவே குறைவுபடுகிறது. எனவே இப்படிக் குறைவுபடும் பொருள்களைச் சரிக்கட்ட ஒன்று குறைத்துச் சமைக்க வேண்டியுள்ளது அல்லது அதிகப்படியாக வருகை போட வேண்டியுள்ளது.

3. பிள்ளைக்கு 11 காசுகள் மேனி அரசு உணவுக்குக் கொடுக்கிறது. இதில் 3 காசு விறகு, 5 காசு காய்கறி, 3 காசு மளிகை என வரையறை செய்கிறது விறகு, காய்கறி, மளிகைக்குக் காசு வரையறை செய்த அரசு காய்கறிக்கு மட்டும் அளவும் வரையறை செய்கிறது. 5 காசில் 50 கிராம் காய்கறி போடவேண்டும். காய்கறியில் பழமும் அடங்கும் என்கிறது அரசு பழம் 5 காசுக்கு எங்கே கிடைக்கிறது? பழத்திற்கு மட்டுமே 5 காசன்று; 50 கிராம் காய்கறிக்கும் சேர்த்துத்தான் இக்காசு வழங்கப்படுகிறது. இது இயலுமா? நடைமுறையில் இயலுமா? ஊழல் பிறக்காதா? சிந்திப்பீர்?

4. ஆசிரியருக்கு இப்பணிக்காக அரசு 20 உரூபாக்கள் தருகிறது. காய்கறி கட்டாயம் ஆகையால், அன்றாடச் சந்தைக்கு அன்றாடம் செல்லாவிட்டாலும் கிழமைக்கு 2 அல்லது 3 நாள் வீதம் மாதம் 10 முறையாவது அருகில் உள்ள நகருக்குச் செல்ல வேண்டியுள்ளது இப்படிப் போக்குவரத்துச் செலவே $10 \times 2 = 20$ உரூபாக்கள் ஆகும். ஆனால் இத்தோடு ஏனங்கள் ஈயம்பூச, ஓட்டை அடைக்க, ஒடுக்கு எடுக்க என ஏற்படும் செலவிற்கும் சேர்த்துத்தான் இத்தொகை என அரசு அறிவிக்கிறது. இத்தொகை போதுமா? எண்ணிப் பார்ப்பீர்.

5. எல்லா நாளிலும் உணவு வழங்கும் பணி, ஆசிரியர்களின் தலைகளில் விழுகின்றது. எனவே ஆசிரியர்கள் புதிய கொத்தடிமைகள் ஆக ஆக்கப்பட்டுள்ளனர்.

6. இத்தகைய நிலையில்:- 1. 10 அகவைக்கு மேற்பட்ட மாணவனுக்கு உணவு அளித்து அதைச்சரிக்கட்ட வேண்டும். சரி செய்யக் கணக்கிலும் அளவிலும் சரிசெய்ய வேண்டும். 2. குறைந்த அளவில கொடுக்கப்பட்ட பண்டங்களைச் சரி செய்யக் கணக்கிலும் அளவிலும் சரிசெய்ய வேண்டும். 3. காய்கறி வாங்கச் சந்தைக்கு அடிக்கடி செல்ல வேண்டும். 4. திட்டம் தொடர்பான செயற்பாட்டிற்கும் வழிச்செலவுப்படியில்லாமல் அலுவலகம் சென்று வரவேண்டும். இதனால் வரும் செலவுகளைச் சமாளிக்க ஆசிரியர் சில தவறுகள் செய்ய வேண்டி நேரிடுகிறது.

7. பழைய பகலுணவுத் திட்டத்தில் 1/3 பங்கினரே உணவு உண்டனர். கணக்கு நிறைவாக இருந்தது. புதிய திட்டத்தில் எல்லாரும் உணவு உண்ணலாம் என்று சொல்லும் போது பள்ளி வந்தவர் அனைவரும் உணவு உண்பவர் ஆகின்றனர். ஆனால், பள்ளி வந்த அனைவரும் உணவு உண்பதில்லை. எடுத்துக் காட்டாக,100 பேர் பள்ளி வந்தால் 60 பேர் மட்டுமே உணவு உண்பர் என வைத்துக் கொண்டால் 40 பேர் உண்பதில்லை. ஆகையினால் 40 பேருக்கு உண்டான பொருளை எடுத்துத் தவறுகப்பயன்படுத்த வழியுண்டு. தடுக்க வழி இல்லை. கண்டுபிடித்தல் மிகக் கடினம்.

பழைய திட்டத்தில் ஆசிரியர்களுக்குச் சிக்கல்கள் மிகக் குறைவு. திட்டப் பணம் மற்றும் பொருளைத் திருடச் சொல்லவும் இல்லை; தூண்டவும் இல்லை. திருடனுக்கவும் இல்லை, ஆனால் புதிய திட்டம் எல்லா வழிகளையும் காட்டுகிறது. திட்டப்பணத்தில் கணிசமான பகுதி குறுக்கு வழியில் வெளியே செல்ல இடமளிக்கிறது.

இத்தகு துன்ப நிலையில்தான் ஆசிரியர்கள் தம் மனச்சான்றுகள் உறுத்துகின்றபடியால் செய்ய மறுக்கின்றனர்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

திராவிடக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்கப்பட வேண்டும்!

அண்மையில் தமிழகச் சட்டமன்றில், திமுக சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் ''தமிழ் நாட்டில் புதிய வானொலி நிலையங்கள் எப்போது வரும்'' என்று கேள்வி கேட்கவும், அதற்கு அ.தி.மு.க. அமைச்சர் விடை சொல்லவுமான வரிகளைச் செய்தித் தாளில் பார்த்து மிகவும் வேதனைப்பட நேர்ந்தது

ஏற்கனவே இத்தமிழகத்தில் உள்ள, வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் நம் தமிழ்க்கலை, நாகரிகம், பண்பாடு, வரலாற்றுண்மைகளை மறைத்து ஆரிய, வேத, புராண திருப்பா (பஜனை) மடங்களாக இயங்கி வருகின்றன அவற்றில் பணியாற்றி வரும் ''அம்மாமி'' களும் ''அத்திம்பேர்களும்'' எப்படியாகிலும இத் திராவிட இயக்கங்களையும், தமிழ் முயற்சிகளையும் தில்லி அரசின் துணையோடு ஒழித்து விடத் திட்டமிட்டு இயங்கி வருவதனைப் பலரும் அறிவர், தமிழ் மக்களின் விருப்பத்திற்கு எதிராக இந்தித் திணிப்பை வலிந்து செய்வதோடு, தமிழ் இசையை மறைத்துத் தெலுங்கு, சமசுக்கிருதப் பாடல்களை இடைவிடாமல் பரப்பி வருகின்றது.

இந்த இழி நிலையில் ''ஏற்கனவே தமிழ் நிலத்தில் தில்லி அரசின் கைகளில் உள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் அகற்றப்பட்டு, இந்தித் திணிப்பும், தமிழ் அழிப்பும் நிறுத்தப்படுமா? அதற்குப் பகரமாகத் தமிழக அரசு வானொலி, தொலைக்காட்சி நிலையங்களை நிறுவி தமிழ் வளர வழி செய்யுமா?'' என்றன்றோ கேள்விகள் கேட்கப்பட்டிருக்க வேண்டும், இத்திரவிடக் கட்சியினரால்!

அந்தோ ! இனியாவது அவர்கள் இழந்து விட்ட தமிழ் வீரம் வருமா ? அல்லது வடவர்களுக்கும், ஆரியர்களுக்கும் எடுபிடிகளாவே காலத்தை ஓட்டுவார்களா ?

—தென்மொழி

நா. இளமாறன்

காவேரி மின் நகர்

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 27-2-83 இதழ் எண்: 13 | பகுதி 16-17

காஞ்சி காமகோடி பீடத்தலைவர் ஒரு குமுகாயக் குற்றவாளி!

தெருவிலே ஓர் ஓரத்திலே நாடாவைச்சுற்றி விளையாடும் சூதாட்டத்தைப் பார்த்திருப்போம். சுற்றி நிற்பவர்களில், அந்த நாடாவைச் சுற்றி சூது செய்பவனைச் சேர்ந்தவர்கள், அந்த நாடாவில் ஒரு குச்சியைச் செருகுகையில், அது அதில் சிக்கிக் கொள்ளும். உடனே அவர்கள் வைத்த பந்தயக் காசுக்கு இருமடங்குக் காசு கிடைக்கும். இதைப் பார்த்த மற்றவர்கள், அஃதாவது அந்த நாடாச் சூதைப்பற்றி ஒன்றுமே தெரியாத பொது மக்கள், அதே மாதிரி, பந்தயத்தில் வெற்றி பெறும் நோக்குடன், தாங்களும் அதில் பந்தயங்கட்டி, கட்டிய காசை இழந்து போவதுடன் மேலும் மேலும் தங்கள் கையிலுள்ள, மடியில் உள்ள காசு, பணத்தையெல்லாம் இழந்து கொண்டே வந்து, இறுதியில் ஒட்டாண்டியாக வீடு திரும்புவார்கள் எனவே, இவ்விளையாட்டை ஒரு சூதாட்டமாகக் கருதி இதை அரசு தடை செய்கிறது.

இதேபோன்ற சூதாட்டமான போக்குதான், காஞ்சி காமகோடி பீடத்தலைவர் அவர்கள் செய்துவரும் மதச் சூதும். அவர் 'உலக குரு' என்று தம்மை அறிவித்துக் கொள்வதும், அவரும் அவரைச் சார்ந்தவர்களும் அவர் 'ஒரு நடமாடும் தெய்வம்' என்று ஒன்றுமறியாத, ஆனால் மதப்பித்தம் பிடித்த ஏழை, எளிய மக்களிடம் விளம்பரப்படுத்துவதும், அவர் கூறும் மதவியல் கருத்துகளை 'தெய்வத்தின் குரல்' என்று அவரைச் சார்ந்த சிலர் அச்சிட்டு வெளிப்படுத்துலதும், ஏமாற்று நிறைந்த ஒரு குமுகாயக் குற்றமேயாகும்.

இந்தியாவைப் பொறுத்தஅளவில், இஃது ஒரு மதப் பித்தமும் மூடநம்பிக்கையும் நிறைந்த நாடு என்பதை ஏவருமே மறுக்க முடியாது. இங்குள்ள மக்களிடம் 'ஓர் 'தெய்வம்' 'கடவுள்' என்று சொன்னால், அவற்றுக்கு 'ஓர் இலக்கணம்', 'ஒரு வடிவம்' ஏற்கனவே, கற்பிக்கப் பெற்றுள்ளது. எனவே மக்களில் யார் தன்னைக் 'கடவுள்' 'தெய்வம்' என்று கூறிக் கொண்டாலும், மக்கள் அவரை. நம்பவே செய்வார்கள். அவர், இவர்களை ஏமாற்றுகிறாரோ இல்லையோ, இவர்களாகவே அவருக்கு ஏமாறக் காத்திருக்கிறார்கள். அவ்வாறு தெய்வம் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்களின் காலடியில் எவ்வளவு செல்வத்தையும் கொட்டுவதற்குக் காத்து நிற்பார்கள். அவர்களின் எந்த ஒரு சொல்லையும் தெய்வம் சொன்னதாகவே நம்புவார்கள். இந்த வாய்ப்பான நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, அத்தகைய மதத்தலைவர் ஒருவர் தமக்குச் சார்பாகவோ, அல்லது தம்மைச் சேர்ந்தவர்களுக்குச் சார்பாகவோ, எதனை யும் செய்து கொண்டு விடவோ, தம் சாய்காலை நிலை நிறுத்திக் கொள்ளவோ முடியும். இவ்வகையில் நாம் முதலில் சொன்ன சூதாட்டத்திற்கும் இதற்கும் எள்ளளவும் வேறுபாடு இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

எனவே, தம்மை ஒருவர் 'தெய்வம்' என்றும், தாம் பேசுவது தான், 'தெய்வத்தின் குரல்' என்றும் சொல்வது ஒரு குமுகாயக் குற்றமாகக் கருதப் பெறல் வேண்டும். மக்களில் வேண்டுமானால் ஒருவர் உயர்ந்த அறிவு பெற்றவ ராகவோ; நல்ல மனவுணர்வு வாய்க்கப் பெற்றவராகவோ இருக்கலாம். அதற்காக அவர் தம்மைத் தெய்வம் என்று சொல்வாரானால், மக்கள் அவரை உண்மையாக ஏற்கனவே தாங்கள் அறிந்து கொண்ட தெய்வத்துக்குச் சமமாகவே கருதிக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. இனி, மக்கள் அப்படிக் கருதுவதற்குத் துணையாக தூண்டுகோலாக— இன்னொரு வாய்ப்பும் நம்நாட்டில் உள்ளது. அஃதாவது, இந்நாட்டின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஆட்சித் தலைவர்கள்கூட, அஃதாவது குடியரசுத் தலைவர், தலைமை யமைச்சர்கள்கூட, அத்தகைய மதக்குருமார்களைப் போய்ப் போய்க் கண்டு வருவதும், அரசியல் நடைமுறைகளுக்கு அவர்களிடம் கருத்துக் கேட்பதும், மக்களுக்கு ஒரு தவறான வழிகாட்டுதலைப் புகட்டுவதாகும். நடைமுறையை, ஒரு நடைபெற முடிகிறது. ஈதுவும் இந்த நாட்டில் தான்

தமிழ் எண்களை மறக்கக் கூடாது!

(பன்மொழிப் புலவர். மு. ச. சிவம், க. மு.; இலக். இல்.)

இந்தியாவின் பதினான்கு 'தேசிய' மொழிகளிலும் வெளி வந்து கொண்டிருக்கும் நூல்களைப் பார்க்கும்போது தமிழைத் தவிரப் பிறமொழி நூல்களில் பக்க எண்களைக் குறிப்பிடுவதற்கு அவ்வம் மொழிகளில் வழங்கிவரும் எண் களுக்குரிய வரிவடிவங்களே பெரும்பாலும் பயன்படுத்தப் பெறுகின்றன. தமிழ் நூல் வெளியீட்டாளர்கள் மட்டும் தமிழ் நூல்களில் 1, 2, 3, 4, 5...10 முதலிய அராபிய எண்களையே பயன்படுத்துகின்றனர். ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய உலகப்பெரு மொழிகளில் இந்த எண்களே பெரும் பான்மையாகப் பயன்படுத்தப் பெறுவதால் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற பரந்த மனப்பான்மையில் தமிழரும் இந்த அராபிய எண்களையே பழக்கத்தில் கொண்டுவந்து விட்டனர். இவற்றை இனிக் கைவிட முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

அண்மையில் தில்லி சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அகரமுதலிக் கருத்தரங்கில் கலந்து கொண்ட போது என் அகர நூல்களை அக்கருத்தரங்கில் கலந்து கொண்ட அறிஞர்களின் பார்வைக்காக வைத்திருந்தேன். அவற்றைப் பார்வையிட்ட பிறமொழி அறிஞர்கள் பலரும் 'தமிழுக்கெனத் தனி எண் வடிவங்கள் இல்லையா?' என்று வினவினர்.

பிறமொழிகளில் இருப்பதுபோலவே தமிழிலும் எண் களுக்குரிய வடிவங்கள் தனியாக உள்ளன என்றும், ஆனால் அவை தமிழ் மக்களால் ஒரே வழியே பயன்படுத்தப்படு கின்றன என்றும் அவர்களிடம் விளக்கிக் கூறினேன்.

க, உ, ங, ச, ரு, சா, எ, அ, கூ, ய, அல்லது க0 முதலிய தமிழ் எண்களைத் தமிழ் மக்கள் மறந்துவிடக் கூடாது என்பது என் பெருவிருப்பம்.

'தென்மொழி', 'செந்தமிழ்ச் செல்வி' முதலிய சில தமிழ் இதழ்களே இவ்வெண்களைப் பயன்படுத்தி வருகின்றன. நூல் வெளியீட்டு நிறுவனங்களுள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோன்றிய நாள் தொடங்கித் தொடர்ந்து தமிழ் எண்களைப் பெரும்பான்மையாகப் பயன் படுத்திக் கொண்டு வருவது போற்றத்தக்கது. தமிழ் நூல் வெளியீட்டாளர்கள் அனைவரும் தமிழ் எண்களைப் பயன் படுத்தினால் அவை எளிதில் பழக்கத்திற்கு வந்துவிடும். முதல் வகுப்புப் பாடநூல்களிலேயே இந்த எண்களைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டியது தமிழ் அறிஞர்களின் தலையாய கடமையாகும்.

தமிழர்கள் தங்கள் பழம் பண்பாடுகளையும், சொத்து களையும் பொன்போலப் போற்றி வந்தால் தான் தமிழினம் உலக அரங்கில் தனிச் சிறப்படைய முடியும்.

பாவலரேறு அவர்களின் நெல்லை மாவட்டச் சுற்றுச் செலவு!

(ஒரு மதிப்பீடு)

அன்புள்ள பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பார்வைக்கு எழுதியது,

தாங்கள் இம்முறை நெல்லை மாவட்டச் சுற்றுச் செலவை மேற்கொண்ட போது தங்களோடு கலந்து பேசும் வாய்ப்புக் கிடைத்தது எனக்கு மகிழ்ட்சியைத் தந்துள்ளது. இதை ஒரு பெரும் பேறாகக் கருதுகிறேன்.

தமிழர் தலைவர்கட்கெல்லாம் தலைவர் நீங்கள். தமிழர் தளபதிகட்கெல்லாம் தளபதி நீங்கள் என்பது வெறும் பாராட்டுரையன்று. என் உள்ளார்ந்த உணர்வின் வெளிப்பாடு இவை.

தாங்கள் பன்னெடுங்காலம் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும். எந்நிலையிலும் சோர்வான சொற்களைக் கூற வேண்டாம். என்போன்ற எளிய தமிழ்த் தொண்டர்கள் தங்கள் பின் அணிவகுத்து நிற்போம்.

—அ. பழநிச்சாமி.

தலைவர், நெல்லை மாவட்டப் பகுத்தறிவாளர் கழகம்,
சங்கரன் கோவில்.

அரசனே, மக்களில் ஒருவரைத் 'தெய்வம்' என்றும், அவர் பேசுவதைத் 'தெய்வத்தின் குரல்' என்றும் ஏற்பதனால், மதிப்பதனால், மக்கள் அவரைப்பற்றி என்ன தான் நினைக்க மாட்டார்கள்? இந்த நிலை மக்களின் அறிவு முன்னேற்றத் திற்கும், வாழ்வியல் முயற்சிகளுக்கும் எத்துணை தடையாக அமைந்துவிடும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

எனவே, இக்கொடுமையான ஏமாற்றுப் போக்கு, ஒரு குமுகாயக் குற்றமாகக் கருதப்பட்டு அரசியல் சட்டத்தால் தடை செய்யப் பெறுதல் வேண்டும், தடுக்கப் பெறுதல் வேண்டும் என்பதை அரசுக்கும், அறிஞர்களுக்கும் கூறிக் கொள்ள விரும்புகிறோம். பொதுமக்களும் இதுபற்றிச் சிந்திப்பார்களாக!

அ.தி.மு.க.வா? ஆ. மு. க. வா?

இந்திய அரசும், மற்றும மாநில அரசினரும் மதச சார்பற்ற நடுநிலைக் கொள கையினை கொண்டவை என்று பல்லாற்றானும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில தமிழகத்து அமைச்சா பெருமக்கள மடங்களை நாடிச் செல்வதும மதவாசிரியர்களைச சந்திப்பதும், அவர் தம பெருமைகளைப பேசுவதும வழக்கமாகி வருகின்றது.

மகாபலிபுரத்தில் நடை பெற்ற தனியார் திறப்பு விழா நிகழ்ச்சி ஒன்றில், சின்னப் பெரியவாள், காஞ்சி ஆச்சாரியாா கலந்து கொண்டுள்ளாா. தமிழக மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருட்டிணசாமி அவர்கள் முன்னதாகவே, வந்து காத்திருந்து காஞ்சியாரை வரவேற்றதோடு அல்லாமல் அவரின் கண்ணணுவின் குறிப்புணர்ந்து அதனை ஆணையாக ஏற்று திறப்பு விழாவினை, நிகழ்த்தினார் என்று அறிகிறோம். இதே அமைச்சர், கடந்த 81 ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற ம.கோ. இரா (MGR) மன்ற (விழாவில்) மாநாட்டில் இலக்கக் கணக்கான மக்கள் காண புரட்சித் தலைவரின் திருவடிகளைத் தொட்டு வணங்கியவர்.

இவ்வமைச்சர் பெருமான் முதுகலையோடு சட்டவியலும் பயின்று திராவிட இயக்கத்தில் தொடர்ந்து இருந்து வருபவர் இன்னுமொரு அமைச்சர் திருச்சியில் நடைபெற்ற, குட முழுக்கு விழாவில் கலந்து கொண்டு பெரிய காஞ்சியாரை வானளவாப் புகழ்ந்தார். இவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அதிகார நிலையில் ஆற்ற வேண்டிய அளப்பரிய பணிகளைச் செய்திட வேண்டியவர்கள்; மதங்களை காக்க வந்த புரப்பாளர்கள் அல்லர் இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவர்கள் தங்களைப் பெரியார், அண்ணா வழி நடப்பவர்கள் என்று விளக்கப் படுத்திக் கொள்வது வருந்தத்தக்கதாயுள்ளது.

நாம் அவர்களைப் பணிவுடன் வேண்டுவதுஎன்னவெனில் ஒன்றுல் அவர்கள் பெரியார், அண்ணா வழி நடக்க முயலட்டும்; அன்றால், தங்களது கட்சியின் பெயரில் உள்ள அண்ணா, திராவிடம் ஆகிய சொற்களை விடுத்து 'ஆரிய முன்னேற்றக் கழகம்' என்று பெயரிட்டுக் கொண்டு தேர்தலில் வென்று தங்கள் விருப்பம் போல் செயல்படட்டும்.

சிந்திப்பார்களா? செய்வார்களா!!

- தமிழ்வழுதி, சேலம்-6.

மாநிலங்களின் உரிமை பாதுகாக்கப்படாவிட்டால்
இந்திய ஒருமைப்பாடு அழியும்!
ப.நெடுமாறனுடன் நேருரை!

காமராசர் பேராயக் கட்சித் தலைவர் ப. நெடுமாறன் 'கருநாடகம் தமிழகத்திற்குத் தண்ணீர் விடவேண்டும்' என்று கோரி நீண்ட வழிச்செலவை மேற்கொண்டார்.

திருச்சி பொதுக்கூட்டத்தில் பேசிய அவர் இராப்பொழுதில் காவிரி இரண்டாகப் பிரியும் முக்கொம்பு அணைக்கட்டுப் பூங்கா ஆய்வுமாளிகையில் தங்கி ஓய்வு கொண்டார். காலையில் வழிச்செலவைத் தொடங்கித் திருப்பராய்த்துறை, சிறுகமணி, பேட்டைவாய்த்தலை குளித்தலை ஆகிய ஊர்களில் கொடுக்கப்பட்ட வரவேற்புகளில் கலந்து கொண்டு பேசினார். பெரும்பாலும் சனதா பேராயக்கட்சியினர் வரவேற்பு ஏற்பாடுகளை ஆர்வமுடன் செய்தனர். அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்டனர்.

உடன் சென்ற நானும் நெடுமாறன் பேச்சைக் குறிப்பெடுத்தேன். குளித்தலை வழிச்செல்வோர் விடுதியில் அவருடன் அமர்ந்து பகல் உணவு கொண்டேன்.

— அறிவின மூவலவன

கலியுடன் பேசிய அவரிடம் ஏறத்தாழ 15 நிமையங்கள் உரையாடினேன். சில கருத்துகளை விளக்கியும், இடைத்துடனும் அவர் கூறினார்.

அவர், பேச்சுகளையும், கருத்துகளையும் சுருக்கித் 'தமிழ்நிலம்' படிப்பவர்களுக்கு அளிக்கிறேன்.

ப. நெடுமாறன் பேசியவை: - '1924-ஆம் ஆண்டு உடன்படிக்கையை நிறைவேற்ற தி.மு.க. அரசு முயற்சி எடுத்தது. ஆனால் கருணாநிதியை இந்திரா காந்தி அழைத்துப் பேசினார். அவர் கொடுத்த சொல்லுறுதியை நம்பிக் கருணாநிதி தம் முயற்சியை விட்டார். ஆனால் இந்திராகாந்தி நம்பவைத்து ஏமாற்றம் செய்தார்; ஏமாற்றினார். கருணாநிதி ஏமாறினாரோ இல்லையோ, தமிழக மக்கள் ஏமாற்றப்பட்டனர்.

கருநாடகத்தில் கட்டப்பட்டுள்ள அணையால் புதிய விளைச்சல் நிலங்கள் உருவாக்கப்படவேண்டும். ஆனால் முன்பே தமிழகத்தில் பல ஆயிரம் குறுக்கம் (ஏக்கர்) நிலங்கள் விளைச்சலில் இருக்கின்றன. முறையாகக் கருநாடகம் தமிழகத்திற்குத் தண்ணீர் விடவேண்டும். அ.தி.மு.க அரசு மெத்தனமாக நடந்து கொள்கிறது. உரிமையைப் பாதுகாக்க முயலவில்லை. தி.மு.கவின் மீது குறைகூறிக் கொண்டு இருக்கிறது.

இந்திராகாந்தி தமிழகத்திற்கு உரிய நீரைக் கொடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாநிலத்திற்கு முறையாக கிடைக்கவேண்டிய உரிமைகள் கிடைக்காவிட்டால், இந்திரா கொடுக்க மறுத்தால் இந்தியாவின் ஒருமைப்பாடு அழியும்.

இந்திரா, இந்தியா ஒற்றுமையாக இருக்க விரும்பினால் மாநிலங்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். அதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும். நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீருக்காக நாம் ஒன்றுகூடி நிற்கவேண்டும்; போராட வேண்டும், நம் நலன் பாதுகாக்கப்படவேண்டும்'.

ப. நெடுமாறனுடன் உரையாடியபோது அவரிடம் 'கருநாடகம் தண்ணீர் கொடுக்கும் சிக்கலில் தாங்கள் எடுக்க நினைக்கும் நடவடிக்கையின் கருத்தென்ன' என்று வினவினேன்.

அவர் கொடுத்த விடையாவது 'முத்தரப்பு நடுவர்குழு ஒன்றை அமைத்து மீண்டும் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டும். கருநாடகம் புதிய விளைச்சல் நிலங்களை உருவாக்கிக் கொள்வதில் நமக்கு மறுப்பில்லை. ஆனால் நம் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய உரிய நீரைக் கொடுக்கவேண்டும் இந்த நிலைமை நீடித்தால் தமிழக மக்கள் கொடிய வறுமையை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இந்த முயற்சியில் அ.தி.மு.க அரசையோ, தி.மு.க.வையோ நம்பி பயனில்லை. தமிழக மக்கள் ஒருமுகமாக திரண்டெழுந்து போராட வேண்டும். இப்போக்குகள் இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்காது; இந்திய ஒருமையைச் சீரழிக்கும்.'

ப. நெடுமாறன் மாலை 5-30 மணிக்கு குளித்தலையில் இருந்து புறப்பட்டு முசிறி சென்று, அங்கிருந்து மோகனூர் பொதுக்கூட்டத்திற்குப் போனார்.

அவரிடமிருந்து இன்முகம் கூறி நான் விடைபெற்றேன்.

ப நெடுமாறன் வழிச்செலவு கொண்டபோது இந்திரா பேராயக்கட்சி முதல்வர் குண்டுராவ் கருநாடகத்தில் ஆட்சியில் இருந்தார். இந்தச் செய்திக் கட்டுரை வெளிவரும் நேரத்தில் சனதா பேரியக்க முதல்வர் இராமகிருட்டிண கெக்டே முதல்வராக இருக்கின்றார். அவரும் தண்ணீர் கொடுக்க மறுப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

தமிழர்களின் ஏமாளித்தனமும், உறவுக்குக் கைக் கொடுப்பதாகக்கூறி எதற்கும் விட்டுக் கொடுக்கும் போக்கும், அடிவருடித்தனமும், அடிமைவிலங்கியல் போக்கும் ஆட்சியில் அமர்ந்து கோலோச்சுவதால் அவர்கள் இழக்கப்போவது இன்னும் என்ன என்னவோ?

தமிழீழத்திற்கு மாறான கருத்துக்குத் தாங்களும் உடன்படுகிறீர்களா?

அன்பார்ந்த ஐயா,

வணக்கம், சென்ற 9-1-83 நாளிட்ட 'தமிழ் நிலம்' இதழைக் கண்ணுற்றேன். அதில் தலைப்புச் செய்தியாக, திரு. குன்றக்குடி அடிகளாரின் கருத்தாக 'தமிழீழம் தேவையும் இல்லை" அது பெறுவது நடக்காது, என்பதைப் படித்தேன். தாங்கள் அந்தச் செய்திக்கு முதலிடம் கொடுத்து வெளியிட்டு இருப்பதைப் பார்க்கும்போது, அந்தக் கருத்துத் தங்களுக்கும் உடன்பாடானது என்றே எண்ணத் தோன்றுகிறது. திரு. குன்றக்குடி அடிகளாரின் உண்மை நிலையை மக்களுக்குப் படம்பிடித்துக் காட்டவேண்டும் என்று உண்மையிலேயே நீங்கள் எண்ணியிருந்தால் ஆசிரியருரையின் மூலமே சிறப்பாக வெளியிட்டு இருக்கலாம், ஆனால் தாங்கள் அந்தச் செய்தியை வெளியிட்டு இருக்கும் முறையானது, அவர் கருத்தில் தாங்களும் உடன்பட்டு இருப்பதையே உணர முடிகிறது. தங்களுக்கு ஈழவிடுதலையில் நம்பிக்கை இல்லையாயின் முகுந்தன் போன்றோரின் கட்டுரையை வெளியிட்டு அவரின் உழைப்பையும் நேரத்தையும் ஏன் வீணடிக்க வேண்டும்? அவருக்கு நல்ல அறிவுரைகளைக் கூறித் தாங்களே ஓர் அலுவலில் அமர்த்திவிடுங்கள். இதுபோன்ற செய்திகளை வெளியிடுவது எந்தவகையிலும் நமது இனத்திற்கு ஆக்கந் தரக்கூடியது அன்று. தாங்கள் மூச்சுக்கு மூச்சு இந்த இனத்திற்காகச் செயல்படுகிறேன் என்று சொல்வதும், இந்தச் செய்தியை வெளியிட்டு இருக்கும் முறையும், ஒன்றுக்கொன்று முரண்பாடானது. இது தங்களின் வளர்ச்சிக்கோ இன ஒற்றுமைக்கோ அல்லது விழிப்பிற்கோ அல்லது உ.த.மு.க. வளர்ச்சிக்கோ எந்த வகையிலும் துணைநிற்காது என்பதைத் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இவண், — இரா, தமிழன்பன், திருப்பூர்

பார்ப்பனரை ஒட்டு மொத்தமாக, இனஞ்சுட்டித் திட்டுவது சரிதானா?
எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்!

பெருமதிப்புக்குரிய பெருந்தகையீர்,

வணக்கங்கள் பல! நம் இயக்கத்தின் நோக்கம் நம்மவர்களுக்கு தமிழ்—இன—மான உணர்வூட்டி நம்மை நாமே புரிந்துகொள்ளச் செய்வதாகவே இருக்கும்படி அமைதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட இனத்தாரை அதுவும் நம் மொழியையே தாய்மொழியாகக் கொண்டுள்ள இத்தவரைப் பழித்தே நாம் பயன் ஈட்ட வேண்டிய நிலைக்குச் செல்வதைத்தவிர்த்தல் நலம் என்றே கருதுகின்றேன். தமிழ்நாட்டைச் சொந்த நிலமாகக் கொண்டு வாழும் எத்தனையோ ஆயிரக்கணக்கான நாயுடுமார்களும் இரெட்டிமார்களும், நாயக்கர்மார்களும், வடுகர்மார்களும் இதைப்போன்ற இன்னும் எத்தனையோ இனத்தார்களும் தமிழ்நாட்டிலே தமிழர்களாகவே இருந்தாலும் தமிழ்நாட்டைவிட்டு கடப்பார்களேயாயின் அவர்கள் தமிழர்களாக வாழ்வதில்லை. வீட்டிலிருந்துகூட தமிழ் விரட்டப்பட்டு அவர்களது மொழியில் உறவாடி அந்தந்த மொழிக் குடும்பங்களோடு ஒட்டி உறவாடி. தமிழரிலிருந்து மாறுபட்ட நிலையிலேயே வாழ்கின்றனர்.

ஆனால் நம் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் தமிழ் நாட்டிலே பிராமணராக வாழ்ந்தாலும் நம் தமிழ் நாட்டுக்கு வெளியிலே தமிழர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். ஒரு காலத்தில் இன்று எப்படி நம்மவர்கள் ஆங்கிலத்தைக் கலந்து பேசுவதையும் ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்களைக் கையாள்வதிலும் வேட்கையுற்றுத் திரிகின்றனரோ, அதேபோல அன்று அவர்கள் சமசுக்கிருதத்தை விரும்பி நமக்கு இழுக்குத் தேடிவிட்டனர். காலம் மாறிவிட்டது. அவர்களுக்குள்ளும் குறைந்தது 75, 80 விழுக்காட்டினர் சாதி—மத வேறுபாடுகளின் ஆழ்ந்த பிடியிலிருந்து இளகிவிட்டனர். இனியும் நாம் குறிப்பிட்டு அவர்களைத் திட்டுவோமேயாயின் அது மாறிவரும் அவர்களிடம் நம்மினப்பற்றை வளர்ப்பதைவிட்டு மாறாக ஒருவகை உள்வெறுப்பையே மீண்டும் உண்டாக்க வழிவகுக்கும் ஒரு பார்ப்பான் நம்மினத்துக்கு எதிரான களங்கத்துக்கு வழி வகுக்கும் பேச்சுகளையோ, நடவடிக்கைகளையோ கடைப்பிடிப்பானாயின், குறிப்பிட்ட அந்த ஆளை மட்டும் நாம் கடுமையாகச் சுட்டித்திட்டலாம். மாறாக இனத்தை முழுதுமாக திட்டித் தீர்ப்பது நன்றாகப்படவில்லை. நம்மவர்களில் சமற்கிருதத்தைத் தலைமேல்கொண்டு ஆடிய முதலியார்கள் இல்லையா? செட்டியார்கள் இல்லையா? பிள்ளைமார்கள் இல்லையா? அதற்காக அவர்களை முழுதுமாக, இனத்தைச் சுட்டித் திட்டுவது நலமாகுமோ?

ஐயா தமிழ்நிலம் இரண்டாவது வெளியீடுகளில் சிலவற்றை இங்கு பெருவணிகர் ஒருவர் வீட்டில் நடந்த நம்மவர்களின் ஒரு கூட்டத்திற்குக் கொண்டு சென்று அனைவரிடமும் கொடுத்துத் தெரியப்படுத்திப் படிக்கச் சொன்னேன்.

மொத்தத்தில் ஏறக்குறைய அனைவருமே இதழின் முன்பக்கத்தில் காணப்பட்ட குறிப்பிட்ட உரையைக் கண்டு முகம் சுளித்தனர். காரணம் இதுபோன்ற வெளியிடங்களிளெல்லாம் தமிழரோடு தமிழராக இணைந்து தமிழ்பேசும் தமிழராக—எங்களோடு சேர்ந்துவாழும் தமிழர்களில் ஒரு பிரிவினராம் அவர்களை — மொத்தமாகத் தமிழ் — இனப்பகைவர்கள் எனக்குற்றஞ்சாட்டித்திட்டுவது சரியெனப்படவில்லை. வெளியிடங்களில் எத்தனையோ மாநிலங்களில் நம்மினம் பெருமைப்படும்படி பெரிய பதவிகளில் இருந்து நம்மைப் பெருமைப்பட வைப்பதோடு, அவ்விடங்களில் தமிழர் மன்றங்கள் மற்றும் தமிழ்த் தொடர்பான மன்றங்கள் அமைப்பதில் அக்கறையும் கொண்டு இன—மான உணர்வோடு செயல்படும் எத்தனையோ பார்ப்பனர்களை நாம் வெளியிடங்களில் காணலாம். இங்கு போர்ட் பிளேயரில் சில ஆண்டுகட்கு முன்பு கால்நடைத் துறையின் இயக்குநராக வாஞ்சிநாத ஐயர் என்ற ஒரு தமிழர் பணியாற்றினார், அப்போது இனஉணர்வால் தூண்டப்பட்ட அவர், வேறு எந்தத் தமிழர்களும் செய்யாத இன நலன் மிகுந்த ஒரு நற்பணி புரிந்தார். அதாவது இங்கு Local Certificate என்ற இடையூறால் அரசுப் பணிகளில் சேரக்கூடாமல் தவித்துத் திண்டாடித் தனியார்—கடைகள் — நிறுவனங்களில் பணியாற்ற மட்டுமே முடிந்த நம்மவர்களைக் கண்டு உள்ளத்தில் ஆற்றாமை கொண்டார். அதே நேரத்தில் தலைமைச் செயலகத்தில் சில நல்ல பொறுப்புகளில் மலையாளிகள் சிலர் இருந்ததால் அவர்களது அறிவுரையின் படி கேரளத்திலிருந்து வந்த எத்தனையோ நூற்றுக்கணக்கான மலையாளிகள் மிகவும் திறமையாகப் போலித்தனமான Local Certificateகளை ஏற்பாடு செய்து அந்தமான் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் பெருவாரியாக நுழைந்த வண்ணமிருந்தனர். நம் வாஞ்சிநாதன் (ஐயர்) இதைக் கண்டார் உள்ளத்தில் திண்ணம் கொண்டார். கடைகளில்வேலைபார்த்த தமிழ் இளைஞர்கள்பலரைத் தாமே அழைத்து அவரவர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப தமது துறையில் நுழைவித்தார். அரசுத்தரப்பிலிருந்த இவருக்கு எதிராக பல இடையூறுகள் விளைவிக்கப்பட்டன. ஆனால், இவர் மனம் மாறவில்லை. எனது கால்நடைத்துறைக்கு நானே இயக்குநர், எனக்குத் தெரியும் யாரை எடுப்பதும் வேண்டாமென்பதும் என்றுகூறி அரசுத்துறையினரை வாயடைத்தார். Local Certificate இல்லாமலேயே இருந்த தமிழர்கள் பலரைத் தமது துறைக்குள் நுழைத்துவிட்டார். இறுதியில் இதனால் இவரை அரசு வேறு ஒரு மாநிலத்திற்கு மாற்றிவிட்டது.

நான் ஏன் இதை எழுதுகின்றேன் என்னில், இது மாதிரியான இன உணர்வுகள் கொண்டவர்களும் பார்ப்பனர்களில் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்களெல்லாரும் பார்ப்பனரை ஒட்டுமொத்தமாக திட்டப்படுவதைப் பார்க்கும்போது மனம் வருந்தமாட்டார்களா? 'இவன் சூத்திரவால்! தீண்டாதே'! என்ற காலம் சற்றேறக்குறைய முழுதும் மலையேறி விட்டது. இனியும் நாம், இனத்தை மொத்தமாகத் திட்டுவது சரியெனப்படவில்லை. அன்புடன்,

— அறிவின்பன், போர்ட்பிளேயர்.

O

தொடர்-8

இதை அறிந்த பண்டார வன்னியன் மும்முனைப் போருக்கு அணியமானான். திருகோண மலையில் இருந்து வந்த ஆங்கிலப் படையைத் தடுத்து நிறுத்த நல்லநாச்சி வன்னிச்சி தலைமையில் ஒரு தன்மானப் படையை அனுப்பி வைத்தான்.

தலைமன்னாரில் இருந்து வந்த பிரித்தானியப் படையை மன்னார் எல்லையிலேயே "பனங்காமம்" ஆட்சிப் பொறுப்பில் இருந்த பண்டார வன்னியனின் தங்கையான ஊமச்சியாள் தடுத்து நிறுத்தினாள். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த படையை, எதிர்த்துப் பண்டாரவன்னியன் போரிட்டான்: 'கற்சிலைமடு' என்ற இடத்தில் இருபடையினருக்கும், பலத்த இழப்பு ஏற்பட்டது. இதில் பண்டாரவன்னியன் படுகாய முற்றான்.

இருப்பினும் வெள்ளையரின் கூலிப்படைகளின், கைகளில் அகப்படாது தளபதிகளின் துணையுடன் தப்பிச் சென்றான். ஆங்கிலேயர் போரில் வெற்றி பெற்றதாகவும், வன்னியாட்சி ஆங்கில மேலாண்மைக் குட்படுத்தபட்டதாகவும் அறிவித்தனர்.

பண்டாரவன்னியனை வெற்றி கொண்ட 'கற்சிலை மடு' என்ற இடத்தில் வெள்ளையரினால் ஒரு நினைவு நடுகல் நாட்டப்பெற்றது. அதில், 'Here Abouts Captain Von Drieberg Defeated Pandara Wanniya 31st Oct 1803" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

கற்சிலைமடுவில் இருந்தும் தப்பிச்சென்ற மன்னன் தங்கை ஊமச்சியாளின் பாதுகாப்பில் பனங்காமத்தில் தலைமறைவாகினான்.

மன்னன் தலைமறைவாகியதைக் கேள்வியுற்ற மாற்றார்பட்டாளம் சினம் கொண்டது. ஒன்றுமறியா மக்களைக் கொன்று குவித்தது. வீடுகளைத் தீக்கிரையாக்கிச் சொத்துகளைச் சூறையாடியது.

மக்களைச் சுட்டுத்தள்ளுவதில் சிங்களவன் வெள்ளையனுக்குச் சளைத்தவனல்லன். இன்று சிங்கள அரசு மக்கள் சொத்துகளைச் சூறையாடி, தமிழ்ப் பெண்களை இழிவுபடுத்தித் தமிழர்களைக்கொலைசெய்து தமிழ்நிலத்தைப் பறிக்கின்றனர். இதை எதிர்த்து வவுனியாவில் மறவன் கிருட்டிணகுமார் (காத்தான்) சிங்களக் கூலிப் பட்டாளத்தை எதிர்த்து காடுகளில் மறைந்து திரிந்து கொரில்லாப்போரை நடத்தினான், தமிழ்நிலம் பறிபோவதையும், அயலவருக்கு அடிமையாவதையும் எந்தவொரு வன்னித் தமிழனும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான் என்பதற்கு எடுத்துக்காட்டாக, எம் கண் முன்னே போராடி மாண்டான் வீரன் கிருட்டிணகுமார். அதேபோல்,அன்றும் பண்டாரவன்னியன் மாற்றாருக்கு அடிமையாக வாழ அவன் உள்ளத்தில் சிறுதுளி இடமும் கிடைக்கவில்லை. இன்று சிறிலங்கா அரசுக்கெதிராகத் துண்டறிக்கை வெளியிட்டவர்களும்,அதை எடுத்துப் படித்தவர்களும், அரசுப் படைகளுக்கு அஞ்சி; இந்தியா, செருமனி, பிரான்சு போன்ற நாடுகளுக்குத் தப்பியோடித் தம் நல வாழ்வு வாழ்வதைப்போல் அவன் வாழ முற்படவில்லை.

விடுதலை உணர்வுகள் அவன் அரத்தத்தைச் சூடாக்கியது. எனவே பனங்காமத்தில் தலைமறைவாக இருந்து ஒரு 'கொரில்லா'ப் படையை உருவாக்கினான்.

அப்படையில் பண்டாரவன்னியனின் தங்கை உட்படப் பல பெண்கள் பயிற்சி பெற்றனர். தக்க பயிற்சிபெற்ற அக் 'கொரில்லாப்படை' காடுகளில் மறைந்திருந்து பிரித்தானியப் படைகளைச் சிதறடித்தது.

ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் பண்டாரவன்னியன் தலைமறைவாக இருந்து கட்டி எழுப்பிய கொரில்லாப் படை, 1810-ஆம் ஆண்டு மே மாதத்தில் மீண்டும் வெள்ளையனுக்கு எதிராகப் போர்தொடுத்து தமிழ் நிலத்தைக் காத்திடத் திரண்டது. கடல் கொண்ட தென்னாட்டின் எச்சத்தில் தென்மொழியாம் தமிழ் மொழியைக் காத்திட வன்னியில் எடுத்த கடைசி முயற்சி,வெள்ளையனால் முறியடிக்கப்பட்டது, பண்டாரவன்னியனின் தமிழ் உடலைப் பிரித்தானியரின் துமுக்கிக் குண்டுகள் துளைத்தன. தங்கை நல்லநாச்சியின் மடியிலே தன் 34-ஆம் அகவையில் உடலை மண்ணுக்கும், உயிரைத் தமிழுக்கும் விட்டுச் சென்றான் பண்டாரவன்னியன். தமிழர்களின் உரிமைக்காகப் போரிட்ட கடைசித் தமிழ் மன்னன் என்ற புகழ் படைத்தான் பண்டாரவன்னியன்.

தமிழர்கள் தனித்தனியாக வீரர்களாகவும், அறிவியலில் சிறந்தவர்களாகவும், பெருஞ்செல்வர்களாகவும் வாழ்ந்துள்ளனர். தனி மாந்தத் திறமைகள் தமிழனுக்கும் பெருமை தேடித்தந்துள்ளது. உலக அரங்கில் தமிழன் அறிவாற்றலும், திறமையும், வீரமும், முயற்சியும் உடையவன் என்ற பெயரை உருவாக்கியுள்ளது. இத்துணைப் பெருமை படைத்ததமிழன் தன் இனத்தைக் காத்திட எந்தவகை முயற்சியும் எடுக்கவில்லை. இனத்தின் சார்பாகத் தன் தனித்திறனை வெளிப்படுத்தித் தன் புகழை உச்சத்திற்கு உயர்த்தினானேயன்றி, இனத்தின் வாழ்வைப்பற்றிச் சிறிதளவும் எண்ணிப்பார்க்கவில்லை. இனம் வாழ்ந்தால்தான் தன் புகழ் வாழ முடியும் என்பதை மறந்து விட்டான். தமிழன் தன் புகழ்பாட தனக்கென்று வரையறை எல்லைக்குட்பட்ட ஒரு நாடும் இருக்கவேண்டுமென்ற நடைமுறையுண்மையை உணரத் தவறிவிட்டான்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலி மன்னனும், வன்னியை ஆண்ட பண்டார வன்னியனும் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்தனரே ஆயினும், தம் வீழ்ச்சிக்குப் பின் இனத்தைக் காத்திட அவர்களால் முடியவில்லை. அவர்களின் சரிவு இனத்தின் சரிவாக மாற்றமெடுத்தது. இனத்தைத்தொடர்ந்து காத்திட படை அமைப்புகளையோ, அரசியல் அமைப்புகளையோ அந்த அரசர்கள் உருவாக்கி வைக்கவில்லை. இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழினம் அடிமைப்பட்டுச் சீரழிந்து போனமைக்கு, திட்டமற்ற அமைப்பற்ற போராட்டங்களே காரணியமாகும்.

(தொடரும்)

முகுந்தன்

செயலர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.

படைத்துறைப் பாசறைகளில்

தமிழீழ விடுதலை வீரர்கள் கொடுமைப்படுத்தப்படும் நிலைகள்!

0 மதக்குருமார் உறுப்புச்சிதைவுக்கு உள்ளானார்கள். — சுதந்திரன்.

0 நித்தி, நிர்மலா கடுமையாகத் தாக்கப்பட்டனர் — ஈழநாடு.

0 என்னை ஆடையின்றித் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு இடுப்பிற்குக் கீழே அடிப்பாகம் வெட்டப்பட்ட சனற்பையைக் கட்டிக் கீழே நெருப்புமூட்டி அதில் மிளகாய்த்தூளைப்போட்டுப் புகையைச் செலுத்தினார்கள். கண்களிலும் மறைவிடங்களிலும் மிளகாய்த்தூள் பூசப்பட்டது.
தங்கத்துரை. 'வீரகேசரி' 17-12-1982

0 தாக்குதலால் சோர்ந்திருந்த நான் காவலர் சொன்னதற்கெல்லாம் உடன்பட்டேன். குடிநீர் கேட்டபோது, சிறுநீரை ஊற்றினார்கள்.
தேவன். வீரகேசரி 12-1-1983

0 கையொப்பமிட்ட வாய்மூலத்தில் நான் குறிப்பிடாதனவும், இருந்தன.
தேவன். வீரகேசரி 14-1-1983.

0 இத்தகைய உறுப்புச்சிதைவு வாய்மூலங்களே சான்றுகளாகும். அடக்குமுறைத் தடைச்சட்டத்தின் கீழான உசாவலை நிறுத்துக. பொதுவான சட்டத்தின் கீழ் உசாவல் செய்-

நாள்தோறும் நடைபெறும் இக் கொடுமைகள் தமிழ்த் தேசிய இனத்தின் மீது, பேரினஆளுமை இனவெறி அரசு கட்டவிழ்த்து விட்ட பட்டாள அடக்குமுறையின் வடிவங்கள். இவற்றுக்குத் துணை அடக்குமுறைத் தடைச்சட்டம். இச் சட்டத்தின் மூலம்;

அரசுக்கு விருப்பமில்லாத எந்த ஒரு செயலைச் செய்யும் (அது நயன்மையான நடவடிக்கையாயினும்) எவரையும் கொடுமையாளர் என,இதன் கீழ் கொண்டு வரலாம். ஏனெனில் இதில் 'கொடுமையான' என்றால் என்ன என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.

எந்த நேரத்திலும் ஒருவர் தளைசெய்யப்பட்டு, தளைசெய்பவர் யார் என்றோ, என்ன காரணத்திற்காகத் தளைசெய்யப்படுகிறார் என்பதோ, எவருக்கும்-நெருங்கிய உறவினருக்குக்கூட தெரிவிக்காது தடுப்புக்காவலில் வைக்கலாம். நள்ளிரவிலோ அல்லது அதிகாலையிலோ உங்கள் வீட்டின் முன்கூட ஓர் உந்து வந்து நிற்கும். அதிலிருந்து படைக்கருவிகளுடன் குதிப்பவர்கள் உங்கள் உடன்பிறப்பாளனை, மகனை அல்லது கணவரை ஏன் உங்கள் மகளை, தாயைக்கூட உங்கள் முன்னிலையிலேயே தூக்கி உந்தினுள் எறிவார்கள். அவர் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்—குருநகருக்கோ, ஆனையிறவுக்கோ, அல்லது பனாகொடைக்கோ-என்பது எதுவுமே உங்களுக்குத் தெரியாது.—தர்மகுலசிங்கம் தாயாரின் நிலை இது.

தமிழ் இளைஞர், மங்கையர் ஏன் மதக்குருக்கள், விரிவுரையாளர்கள்கூட. எவ்வகைநயன்மை உசாவலுமின்றி 18 மாத காலங்கட்கு காவல் நிலையத்திலோ அல்லது பட்டாளப் பாசறையிலோ தடுத்துவைக்க முடியும்-ஆனால் இயல்பான சட்டத்தின் கீழ் ஒருவரை 24 மணிநேரம் மட்டுமே தடுத்துவைக்க முடியும்—இந்த நாட்களுள் நடக்கும் உறுப்புச்சிதைவுகள், கொடுமைகள் நாம் செய்தியிதழ்களில் காண்பவற்றை விட மிகவும் இழிவானவை: கொடுமையானவை!

இங்கு நடைபெறும் உறுப்புச்சிதைவுகள் மூலம் பெறும் குற்ற ஒப்புதல் வாய்மூலங்கள் வழக்குமன்றில் முகாமைச் சான்றாக இச்சட்டத்தின் கீழ் ஏற்கப்படும். இன்று மதக்குருமார், விரிவுரையாளர், மருத்துவர் மீதான வழக்கில் இக் குற்ற ஒப்புதல் வாய் மூலங்கள் சான்றுகளாகக் கூறப்பட்டுள்ளன.

(21-1-1983)

வழக்கு உசாவல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதுகூட குற்றவாளியாக கருதப்படுபவர்கள் வழக்குமன்றின் பாதுகாப்பிலிருந்து அப்புறப்படுத்தப்படலாம்; புதிய புதிய சான்றுகளை வழக்கு நடை பெறும்போதுகூட அணியப்படுத்தலாம். வழக்கு மன்றின் முன் தோன்ற வேண்டிய தேவையோ சான்று பெயர் குறிப்பிட வேண்டிய தேவையோ இல்லை. ஆனால் அத்தகைய சான்று, வழக்குமன்றில் தகுதியுடையதாகக் கருதப்படும்.

இத்தகைய கொடுமைகளைக் கொண்ட தடைச் சட்டத்தின் கீழேயே மதக்குருமார் விரிவுரையாளர், அவர் மனைவி, மருத்துவர் ஆகியவர்களது வழக்கு சேர்க்கப்பட்டு உள்ளது. இதன் கீழ் அவர்கட்கு உண்மையான நயன்மை கிடைக்காது என்பதனாலேயே பல்கலைக் கழக மாணவர்களாகிய நாம்:

"இயல்பான சட்டத்தின் கீழ் உசாவல் செய்
அல்லது விடுதலை செய்"
'கொடுமையான தடைச் சட்டத்தை நீக்குக'!

என்ற கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுகின்றோம். இப்போராட்டம் மேலும் வலுப்பெற வேண்டின் மாணவர்கள்,ஆசிரியர்கள், மதக்குருக்கள், ஊழியர், மருத்துவர்கள் பெண்கள் ஏன் அனைத்துத் தமிழ்த் தேசிய இனமுமே இப் போராட்டத்தில் குதிக்க வேண்டியது அவரவர் கடமையாகும். இல்லையேல்,

என் அயலவனைத் தளை செய்தார்கள்
நான் ஏன் என்று கேட்கவில்லை
என் நண்பனைத் தளை செய்தார்கள்
நான் ஏன் என்று கேட்கவில்லை
இறுதியில் என்னைத் தளை செய்தார்கள்
ஏன் என்று கேட்க யாருமே இருக்கவில்லை

எனும் நிலைக்கே அனைவரும் தள்ளப்படுவோம். தொடக்கத்தில் அரசக்கொடுமை நிலைகள் இளைஞர்களைத் தளை செய்வதும் கொலை செய்வதுமாக இருந்து. இன்று அது தன் கைகளை மதக்குருமார், விரிவுரையாளர், மாணவர்கள், பெண்கள் மருத்துவர் மீது வீசி நெரிக்கத் தொடங்குகிறது. இனியும் நாம் பேசா ஊமைகளாக இருப்பது எமக்கு நாமே சுருக்குக் கயிற்றைப் போடுவதற்கு ஒப்பாகும்.

இவர்கள் தளை செய்யப்பட்ட தொடக்கக் காலங்களில் நாடளாவிய நிலையில் நடைபெற்ற உண்ணா நோன்புகள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் காலப் போக்கில் கைவிடப்பட்டமை, அரசு தான்தோன்றித்தனமாக இவர்களைக் கொடுமையான தடைச்சட்டத்தின் கீழ் வழக்குப் போடும்படி செய்ய ஏதுவாகியது. தொடர்ந்தும் நாம் பேசாமல் இருப்பது இவர்கள் கொடுமையாளர்களாக அரசினால் காட்டப்பட உதவுவது போலாகும். எனவே அனைத்துத் தமிழ்த் தேசிய இனமும் உணர்வு வழியாகப் போராட அணியமாக வேண்டியது மிகத் தேவையாகும்.

— யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவரவை விடுத்த அறிக்கை.

தமிழின நலம் நாடும்

மலேசியத் தமிழ் எழுத்தாளர், இன நலத் தொண்டர்

மாசி அண்ணுமலை

தமிழ்நிலம் அலுவலகம் வந்து வாழ்த்தினர்!

பிப் :23: தமிழ்மொழி, இனம், நாடு இவற்றின் முன்னேற்றத்திற்காகவே தம் எண்ணம், எழுத்து, செயல் மூன்றையும் ஈகப் படுத்திச் சிறந்த பொது நலம் கருதும் நல்மனத் தொண்டராக விளங்கும், மலேசியாவைச் சேர்ந்த எழுத்தாளர் மாசி அண்ணுமலை அண்மையில் தமிழகத்திற்கு வந்துள்ளார்.

சென்னையில் கடந்த பிப். 19, 20 — இல் நடைபெற்ற 'இலங்கை மலையகத் தமிழர் உரிமைக்காப்பு மாநாட்டில் கலந்துகொண்டு, புதுவை, மதுரை திருச்சி கரூர் முதலிய இடங்களுக்குச் செல்லும் நோக்கத்துடன் திரு. மாசி அண்ணுமலை தமிழகச் சுற்றுச் செலவை மேற் கொண்டார்.

அவர் கடந்த 23- ஆம் நாள் 'தமிழ்நிலம்' அலுவலகத்திற்கு வருகை தந்து, ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனா அவர்களைக் கண்டு, அவருடன் உலகத் தமிழின நலம் கருதி ஏறத்தாழ இரண்டு மணி நேரம் கருத்துகளைப் பரிமாறினர். அக்கால் பாவலரேறு அவர்களுடன் சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களும் உடனிருந்து கலந்துரையாடலில் பங்கு கொண்டாரிர்.

உ. த. மு. க. இளைஞர்ப் பிரிவு

திரு. மாசி. அண்ணுமலை அக்கால் பாவலரேறுவிடம் உ. த. மு. கழகத்தில் இளைஞர் பிரிவு ஒன்றைத் தொடங்கி, அவர்களுக்கு நாட்டு நலம் கருதிச் சில சுட்டுப்பாடான இயக்க நெறிகளையும் பயிற்சிகளையும் தருமாறு வேண்டுகோள் விடுத்தார். அதற்கு பாவலரேறு அவர்கள், அந்தத் திட்டம் தமக்கு ஏற்கனவே உண்டென்றும், அது படிப் படியாகச் செயல் படுத்தப் பெறும் என்றும் விளக்கமாகத் தெரிவித்தார்கள்.

உலகத் தமிழர் மாநாடும் தமிழ் அரசும்!

வரும் 1985-இல், உலகம் எங்கணும் உள்ள தமிழர் தலைவர்களை ஒன்று திரட்டி, உள்நாட்டிலோ, அல்லது தமிழர்கள் பெருவாரியாக வாழும் ஏதோ ஓர் அயல் நாட்டிலோ, 'உலகத் தமிழர் மாநாடு' ஒன்றைக் கூட்டித் தமிழர்களுக்கென்று, வங்காளக் குடல் பகுதியில் ஏதேனும் ஒரு தீவை விலைக்கு வாங்கி அதில் முன் மாதிரியாக முழு உரிமை பெற்ற தமிழ் அரசை உருவாக்குமாறும், அதற்குத் தாமும் பிறரும் பலவகையிலும் துணையாக நிற்க விரும்புவதாகவும், மேலும் அவ்வருஞ் செயலுக்குத் தேவையான ஏராளமான பொருளை உலகெங்கணும் திரட்டத் திட்டமிடுமாறும், பாவலரேறுவிடம் கேட்டுக் கொண்டார் திரு. மாசி. அண்ணுமலை. அதற்கும், பாவலரேறு அவர்கள் இசைவான கருத்தைத் தெரிவித்ததுடன், இக் கருத்தைத் தாம் கடந்த 1977 - இல் இலங்கை சென்றிருந்த போதும், 1981-இல் அந்தமான் சென்றிருந்த பொழுதும் அங்குள்ள முகாமையான தமிழின நலத் தலைவர்களிடம் அறிஞர்களிடமும் இதே கருத்தைத் தெரிவித்திருந்ததாகவும் அதனை அவர்கள் வரவேற்கவும் செய்தார்கள் என்றும் பாவலரேறு அவர்கள் கூறினர்கள்.

சிறந்த தொண்டர்; பண்பாளர்;!

திரு. மாசி. அண்ணுமலை' அவர்களின் உணர்வு நிரம்பிய இன நல முன்னேற்றக் கருத்துகள் மிகவும் ஆக்க அடிப்படையானவை. 52 அகவை நிரம்பிய அவர், ஒரு முன்னுள் படை வீரர். 'குமரி' எனனும் திங்களிதழை ஆறு ஆண்டுகள் நடத்தி உள்ளார். ஆராய்ச்சிக் கட்டுரைகள், திறனய்வுகள் பல எழுதி உள்ளார். தமிழின முன்னேற்றங்கருதி அல்லும் பகலும் உண்மை உணர்வுடனும் நடைமுறைப் பட்டறிவுடனும் சிந்தித்துச் செயலாற்றும் திறனுடையவர் திரு. மாசி. அண்ணுமலை. இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்சு, இலங்கை ஆங்காங் அந்தமான், நிக்கோபார் தீவுகள், இந்தியா, கிழக்கு ஆசியா (சபா-சரவாக்) ஆகியநாடுகளுக்கும், பிரிட்டிசு வடபோர்னியா முதலிய தமிழர் வாழும் பகுதிகளுக்கெல்லாம் சென்று அங்குள்ள தமிழர் நலத் திற்கென பல அருஞ்செயல்களைச் செய்துள்ளார்.

எளிமையான தோற்றத்துடன், மிக இனிமையாகப் பழகும் பண்பாளர் திரு. மாசி. அண்ணுமலை அவர்கள், தமிழுணர்வாகவே விளங்குகின்ருர்.

அது ஒரு வேடிக்கை!

அண்மையில் அவர் கலந்து கொண்ட, இலங்கை மலையகத் தமிழர் உரிமைக் காப்பு மாநாட்டைப் பற்றிக் கருத்தறிவிக்கக் கேட்ட பொழுது, ஏளனச் சிரிப்புடன் 'அது ஒரு வேடிக்கை' (அவர் கூறிய சொல் Show என்பது) என்று குறிப்பிட்டார். அதில் தாம் பேசத் தொடங்கிய பொழுது எடுத்த எடுப்பிலேயே, 'தாம் ஓர் இந்தியரும் அல்லர்; திராவிடரும் அல்லர்; தமிழர்' என்று வேகமாக, முன்னிருந்த மிசைமேல் ஒரு குத்துவிட்டுச் சொன்னதாகவும், ஆனல் அதற்கு இங்குள்ள தமிழ்த் தலைவர் சிலர் முகஞ்சுளித்தனர் என்றும், அதை வரவேற்கவில்லை என்றும் கூறினர்.

போராட்ட வீரர்!

இவரை மலேசியாவின் தென்கரை முதல், வடகரை—பெர்லீசு வரை அறியாதவர் எவருமிலர் எனலாம் இவர் 'போராட்ட வீரர்' 'குமரி அண்ணுமலை' 'இராவணன்' என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகிருர். மலேசியத் தமிழ் இலக்கியக் கழகத்தின துணைத் தலைவராகவும், பொருளாளராகவும், மலேசியா திரு. இரா. வீரப்பன் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைமையகத் துணைச்செயலாளராகவும். மலேசியக் கிளையின் துணைத் தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றி வருகிருர்.

நம் சிறப்புச் செய்தியாளர்

இவர் எழுதி அண்மையில் வெளி வந்துள்ள ஐந்தடித் தமிழர்கள் என்னும் சிறிய நூல், மலேசியாவில் வாழும் தமிழர்களின் வரலாற்று நூலாகப் பாராட்டும் பெருமையுடையது.

இறுதியாகப் பாவலரேறு அவர்களிடம் விடைபெற்றுப் போகும் பொழுது, 'தமிழ்நிலம்' இதழ் வளர்ச்சிக்கெனத் தம் அன்பளிப்பாக உரு 105/-ஐ உவப்புடன் அளித்துத் தம் அன்புணர்வை வெளிப்படுத்திக் கொண்டார்.

80,000 பதவிகளில் ஏமாளியர்க்கு 8000! ஏய்ப்போர்க்கு 72,000!

இந்த நாட்டு மக்கள் தொகையில் 70 விழுக்காட்டினர், தாழ்த்தப்பட்டோரும், பிற்படுத்தப்பட்டோரும், மலைவாழ் மக்களும் ஆவர் என்பதை முதற் கண் நினைவு கொள்ளுதல் வேண்டும்.

சேலம் இரும்பாலை, ஆவடி தொழிற்சாலை, திருச்சி 'பெல்' நிறுவனம் போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் இந்தியா முழுவதும் உள்ள முதல் நிலை அதிகாரிகளின் பதவிகள் மொத்தம் 80,994.

இவற்றில் தாழ்த்தப்பட்டோர் — மலைவாழ் மக்கள் 4. 51 விழுக்காட்டினர்.

பிற்படுத்தப்பட்டோர் ... ... 4. 59 விழுக்காட்டினர்.

பதவிக் கொள்ளையர்களான உயர் வகுப்பினர் ... ... 91.90 விழுக்காட்டினர்.

80,000 பதவிகளில் 72,000 பதவிகளா உயர் வகுப்பினர்க்கு? எத்துணை பெரிய கொள்ளை இது! எத்துணை பெரிய இரண்டகம் (துரோகம்) இது! எத்துணை பெரிய ஏமாற்று வேலை இது! எத்துணை பெரிய ஏய்ப்பு இது!

வறுமை! வறட்சி! ... மறுபுறம்??

தமிழகத்தில் இன்று பருவமழை தவறி விட்டதாம், வறட்சியும் வந்துவிட்டதாம். இயற்கையான இந்த வறட்சி குறுகிய காலத்தில் ஏற்பட்டதுதான்.

இந்த வறட்சி நேர்ச்சியை எதிர்கொள்ள— வெல்ல- மக்களால் முடியும். எப்போது இது, இயலும்? மக்கள் சிந்திக்கும் அறிவு பெற்றவர்களாய் இருக்கும்போதுதான் இஃது இயலும். ஆனல் நம் மக்களோ அறிவு வறட்சியின் உச்சிக்கே அழைத்துச் செல்லப் பட்டு உள்ளனர்.

இந்த வறட்சியின் நெருக்குதலிலும் திரைப்பட அரங்குகள் நிறைந்ததாம் வழிகின்றன. சிற்றூர்ப் புறங்களில்கூட பகல் காட்சிகள், இரவுக் காட்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. வாழ்வின் கீழ்த்தட்டில் உள்ள மக்களின் பணம் சுரண்டப்படுகின்றது. மின்தட்டுப்பாடு இருந்தும் மின்னுக்கிகள் வைத்துத் திரையரங்குகள் மக்களின் உழைப்பைத் தட்டின்றி உறிஞ்சுகின்றன.

உழைப்பையும் கொடுத்து, உணர்வையும் இழந்துவிட்ட இம் மக்களோ திரைப்பட நடிகர்களுக்காகவே தம் நேரம் பொருள் முதலியவற்றை வீணடிக்கின்றனர். காட்டாக, இப்போது வேலூரில் நடைபெறும் ஒரு திரைப்படக்கதைத் தலைவனின் அட்டைப்படத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். அப்படம் காண்பிக்கப்படும் அரங்கின் முன் வைத்துக் கட்டினர். அதற்கு மாலைகள் இட்டனர். தேங்காயின் மேல் கற்பூரம் வைத்துக் கொளுத்திச் சுற்றிச் சிதறு தேங்காய் விட்டனர். பலவகை வெடிகளை வெடித்து விழாக் கொண்டாடினர். இவர்களின் இவ் வறியாமைச் செயலுக்காக அச்சாலையில் சிறிது நேரம் போக்கு வரத்தே தடைப்பட்டது.

இவ்வேதுமறியா மக்களை இவ்வாறு விழாக் கொண்டாட வைத்தது எது? இன்றைய வறுமையை வெல்ல உழைக்கத் தூண்டாமல் பொழுதுபோக்குகளில் ஆழ்த்துவது எது? இவர்களைச் சுரண்டும் கயவர்களின் காசா? இம் மக்களின் அறியாமையா?

மா. செ. தமிழ்மணி நெமிலி.

வெள்ளையரின் கொலை வெறி!

இனவெறி பிடித்த தென் ஆப்பிரிக்கா சட்டத்திற்கு எதிராகக் கைப்பற்றியுள்ள நமீபியாவின் தலைநகரான விண்டோக் நகரில் ஒரு கொலைக் குற்றத்திற்காக வெள்ளையருக்கு அளிக்கப்படும் தண்டனை, வெறும் சில நூறு தாலர்கள் தண்டம் மட்டுமே! ஆகவே, நிலக்கிழார் ஒருவரின் மகன் சோகோபுக் லிபென்பெர்க 20 அகவையான ஆப்பிரிக்கப் பெண்ணைக் கொன்றதற்காக 250 தாலர்கள் தண்டம் கட்டிவிடுத் தப்பியதில் வியப்பில்லை.

விண்டோக் நகரத்தைச் சேர்ந்த ஒருவர் கூறுகிருர்: வேண்டும் என்றே அப்பெண்ணை லிபென்பெர்க் கொன்றிருக்கிருன். அப்பெண் மழைக்கு அவனுடைய மகிழுந்தின் (காரின்) பின்புறம் ஒதுங்கியிருந்ததால் மகிழுந்து நின்று விட்டது என்கிருன், லிபென்பெர்க். மகிழுந்தின் பின் பகுதியில் ஒதுங்கியிருந்த பெண்ணைக் கண்டதும் லிபென்பெர்க் அருகில் இருந்த ஒரு மரக்கட்டையை எடுத்து அவள் தலையில் வலுவாகப் பலமுறை தாக்கினன். அப்பெண் மயங்கி விழும்வரை அடித்துவிட்டு மகிழுந்தை எடுத்துக் கொண்டு, பொழுது போக்கு விடுதிக்குச் சென்று விட்டான்; அன்று இரவே அந்த பெண்ணும் இறந்து விட்டாள்.

நமீபியாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் ஓர் ஆப்பிரிக்கனைக் கொலை செய்யும் வெள்ளையர் தண்டனைக்கு உள்ளாகாமல் விடப்படுவது வழக்கமாகிவிட்டது. இது குறித்து தென் ஆப்பிரிக்கத் தாளிகை 'இசுடார்' எழுதுகிறது: சோக்ன்சுபர்க்கில் ஆரிசாம், என்ற ஒரு உணவு விடுதி முதலாளி கொலை செய்வதில் வியப்பான செயல்கள் சில புரிந்துள்ளான். அவனுடைய கொலை 'விளையாட்டு' இப்படித் தான் தொடங்கியது. ஓர் அஞ்சல்காரர், ஆப்பிரிக்கர்களுக்கான கொல்லைப்புற வாயில் மூலம் உள்ளே வராமல், பொதுவான வழியில் நுழைந்து விட்டதற்காக அவரைச் சுட்டுக் கொன்ருன் இந்த முதலாளி. அறமன்றத்தில் இந்த முதலாளி, 'என் கதவின் தாழ்ப்பாளை அவன் தொட்டுக் கறைப்படுத்தி விட்டான்' என்ருன். இனவெறி ஆட்சியில் தாழ்ப்பாளை 'தீட்டு'ப் படுத்தியவன் குற்றவாளியானுன்; அவனைக் கொலை செய்தவன் சில தாலர்கள் தண்டம் செலுத்திவிட்டுத் தப்பினுன்.

அதற்குப் பிறகு சாம் பல ஆப்பிரிக்கர்களைத் தொடர்ந்து கொலை செய்து வந்தான். ஒவ்வொரு முறையும் அவன் செய்த கொலைக்காக 120 தாலர்கள் தண்டம் செலுத்தும்படி அறமன்றம் அவனுக்குக் கட்டளை அனுப்பியது. இப்படியாக, ஒரு வெள்ளையனைக் கொலை செய்யுமவரை அவன் தப்பித்து வந்தான். சட்டப்படி வெள்ளையனைக் கொலை செய்பவர்களுக்குத் தீவிர தண்டனை அளிக்கப்படும். ஆனல் அப்படியிருந்தும் இம்முறையும் அவன் தப்பித்துக் கொண்டான். இவனல் கொலை செய்யப்பட்டவன், ஒரு கொலைகாரன்; அவனை ஏற்கெனவே காவலர்கள் தேடிக் கொண்டிருந்தனர். இம்முறை சாமுவுக்குக் காவலர்களிடமிருந்து பாராட்டுதலும் கிடைத்தது.

வெள்ளை இனவெறி ஆட்சியில் மாந்தத் தன்மையற்ற அச் சட்டம், வெள்ளைச் சிறுபானமையினரின் நலனையே காக்கின்றது; வெள்ளைக்காரக் கொலைகாரர்கள், தாங்கள் ஓர் ஆப்பிரிக்கனைக் கொன்ருல், சில தாலர்களைத் தண்டம் செலுத்தினல் போதும் என்பதை நன்கு அறிவர்; இம் முடிவை அளிப்பதும் வெள்ளை இனவெறியர் அறமன்றம் தானே!

ஒரு திறனாய்வு மடல் :

தமிழ்நிலத்தில் முரண்பட்ட செய்திகளா ? கவனித்து வெளியிட வேண்டுகிறேன் !

ஐயா அவர்களுக்கு,

• வணக்கம். நலம், நலமே வேண்டுகிறேன். ''தமிழ் நிலம்'' (தொகுதி — 1 பகுதி 9, 10) கண்டேன். அதன் வளர்ச்சிக்கும் அதனால் தமிழர் வாழ்வுக்கும் இறுதி வரை என்னால் இயன்ற மட்டில் நான் துணையிருப்பேன்; அதனால் ஆறுயிரம் கற்களுக்கும் அப்பால் இருந்தாலும், சிற்சில கருத்துகளைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டு வதாகின்றது.

—குன்றக்குடி அடிகளார் ''தமிழீழம் பெறுவது நடக்காது. அது தேவையுமில்லை'' என்று கூறிய கூற்றை அவரது தனிப்பட்ட கருத்தாகத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் ''மலேசிய நாட்டில் தமிழர்களுக்கு ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழியாக இருக்கிறது இதனால் அவர்கள் மலே நாட்டிலுள்ள தேசிய மொழியினருடன் போட்டி போட முடியவில்லை' என்று கூறுவதை அறிவின் முனைவன் எப்படி ஒட்புக் கொண்டார்? தமிழ்நாட்டில் தமிழ் பயிற்று மொழியாவதற்கு இந்திய ஆட்சியாளர்கள் காட்டிய போலிக் காரணம் இது தானே! அப்போது அதனை வன்மையாகக் கண்டித்தது நம் தென்மொழி இயக்கம் தானே! இப்போது மலையகம் என்பது தமிழையும் ஆட்சிமொழியாகக் கொண்ட நாடு என்பதும அதில் தமிழ் பயிற்று மொழியாக இருப்பதைக் கண்டு பாராட்ட வேண்டிய குன்றக்குடியார், அது தமிழர்களுக்கு அங்கே இடைஞ்சலாக இருப்பதைப் போலக் கதைப்பது ஏனோ? அ. மு. இதனை எடுத்துக் காட்டியிருக்கலாம்!

குன்றக்குடியார் மேலும் ''ஆங்கிலப் பள்ளியில் பயில்பவர்கள் இரண்டாம் மொழியாக இந்தியைக் கற்கிறார்கள். தமிழ்க்கல்வி கற்கும் பிற்காலத் தமிழர்களின் நிலை என்ன? ஒட்டுமொத்தமாகத் தமிழில் கல்வி வரவேண்டும்; இல்லையேல், தமிழர்களாவது முன்னேறி வாழ வேண்டும்'' என்றார் என்றால், அவர் தமிழ் மாணவர்களைத் தமிழகம் விடுதலை பெறும் வரை தமிழ் பயில வேண்டாம் என்று சொல்வதாகத் தானே பொருள்? இவ்வாறு தமிழ் உணர்வுகளுக்கு - தமிழ்க் கல்விக்கு தமிழத்தேசிய உணர்வுக்கு வேட்டு வைக்கும் குன்றக்குடியாரின் பேச்சு தமிழ்நிலத்தில் வெளிவந்துள்ளதே!

வினா - விடைப்பகுதியில் மறைமலையடிகள் தம்மளவில் நின்று தமிழுக்கு உழைத்தவர் என்றும், கலைஞர் மு.க. தமிழுக்கு மட்டுமின்றி தமிழினத்திற்கும், நாட்டிற்கும், உழைத்தவர்; உழைத்து வருபவர்'' என்னும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது குன்றக்குடியாரைவிட மறைமலையடிகள் பொதுவாழ்வோடு அரசியலோடு தம்மை இணைத்துக்கொண்டு தனித்தமிழுக்கு மட்டுமின்றித் தமிழின வரலாற்றிற்கும் இந்தி எதிர்ப்புப் போருக்கும் தமிழின மக்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் உழைத்தவர் என்ற தென்மொழி அரிச்சுவடி தானும் தெரியாத - வருங்காலத்தைப் பற்றிய பொறுப்புணர்வு குன்றிய, கணிப்புத் திறனற்ற கலைஞரடியார் ஒருவர் தமிழ் நிலப் பெயரால் இவ்வாறு தம் கருத்தைக் கட்டு அவிழ்த்துவிட்டுள்ளார் என்றே கருதுகின்றேன். இதுபோன்ற கருத்துகள் தென் மொழி இயக்க உணர்வுக்கு முரண்பட்டனவும், முழுக்கேடு பயக்கக் கூடியனவுமாகும். தங்கள் பெயருக்கும் ஊறுவிளைவிக்க கூடியனவுமாகும்.

தனித்தமிழ் இயக்கத் தலைவர் மறைமலையடிகளும் தமிழ் நாட்டின் ஒரு கட்சித் தலைவரான கலைஞர் மு.க. வும் குன்றும் குன்றி மணியும் ஒப்ப இருபெருந்தரத்தினர். அவர்களைப் பொது நோக்காக அளந்து பெரும்போக்கில் இப்படி அளப்பது இருதரத்தின் அடிநிலைப்பட்டார்க்கும் பெருங்கேடு விளைவிக்க கூடியதாகும். ''அருகிலிருந்து பார்ப்போருக்கு அகல் விளக்கே வானத்து விண்மீனை விட ஒளி தருவது'' என்று கூறுவதைப் போன்றதாகும்! மேலும் ''பெயர் மாற்றம் ஒன்றே ஒருவர்க்கு முழுத்தகுதியையும் ஏற்படுத்தி விடாது உழைப்பையும் பார்க்க வேண்டும். எனவே பெயர் மாற்றிக்கொள்ளாதது கலைஞர்க்கு இழுக்கு ஆகாது'' . என்று தமிழ் நிலமா கூறுவது ? தமிழ் நிலம் (தொகுதி—1, பகுதி—8) வினா — விடைப் பகுதியில் '' (சுவாமி நாதன் என்னும்) உங்கள் பெயரை பாருங்கள் ! அதில் தமிழ்எழுத்துத்தான் உள்ளது; ஆனால் ஆரிய அடிமைத் தனம் உள்ளதே! அந்த இழிவைப்பற்றி நீங்கள் சிந்திக்கவில்லையே! '' என்று ஒருவருக்கு விடை தந்துள்ள தமிழ் நிலத்தில், கலைஞர்க்குச் சபபைக்கட்டு கட்டுவதற்காக— தனித் தமிழ் இயக்கக் கொள்கைக்கு முரணாக — இவ்விதழில் கருத்தறிவித்து இருப்பது கடியத்தக்க ஒன்று. இனிவரும் இதழ்களில் நம இயக்கக்கொள்கைக்கு வளைந்தும் நெளிந்தும் கொடுக்காத, வல்லுரமிக்க எழுத்துகளே இடம் பெறல் வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அல்லாக்கால் அரசியற்காரர்க்கு ஒரு வகையாகவும், ஊதியக்காரர்க்கு ஒரு வகையாகவும், நீத்தார்க்கு ஒரு வகையாகவும், நிலத்தார்க்கு ஒரு வகையாகவும் கருத்தறிவித்தால் தென்மொழிக் கொள்கையை—தனித்தமிழ் இயக்கத்தை நாம் குறைத்துச் சிதைத்துவிடக்கூடும். பெரியார் செய்த பெரும் பிழையை எக்காரணப் கொண்டும் பெருஞ்சித்திரனார் செய்ததாக ஆகிவிட வேண்டாம்

மேலும் ஒன்று: பாரிசிலிருந்து தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்சு) தமிழின விடுதலைக் குரலாக ''தமிழ் முரசு'' என்னும் விடுதலை இதழை நளித் திங்களி லிருந்து வெளியிடுவது உண்மைதான். அதற்கு முன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு (பிரான்சு) பல மாதங்களாக '' எரிமலை '' என்னும் மாத இதழைத் தமிழீழ விடுதலைக் குரலாக நடத்தி வந்தது என்பதும், அதேபோது, பிரான்சு தமிழர் இயக்கம் ''தமிழ் முரசு'' மாத இதழை நடத்தி வந்தது என்பதும், ஈரியக்க இணைப்புக்குப் பின்னரே, ஓரிதழாகத் ''தமிழ் முரசு'' என்னும் பெயரில், கடந்த நளித் திங்கள் முதல் வெளிவருகின்றது என்பதும், தமிழ் நிலம்படிப் பார்க்குத் தெரிவித்தருளுமாறு வேண்டுகின்றேன்.

விரைவில் ''ஆறும் ஊரும்'' என்னும் தலைப்பில் உலகத்திலுள்ள அனைத்து நாடுகளிலும் உள்ள பெரும்பாலான ஆறுகள் (ஆறு என்பதன்) 'அர்' என்னும் பகுதியை முன்னொட்டாகவும், அதுபோல் உலகின் பேரூர்களின் பெரும்பாலானவை, (ஊர் என்பதன்) 'உர்' என்னும் அரிய பகுதியைப் பின்னொட்டாகவும் கொண்டுள்ள உண்மையைக் காட்டுகளுடன் எழுதி விடுக்க உள்ளேன். அதேபோல், கருங்கடல் வாழ் கரியர் (கரீபியன் தீவார்) தமிழரே என்னும் கட்டுரையையும் அனுப்புகின்றேன்.

அன்பு

தமிழேந்தி, பிரான்சு.

இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா அலுவலகத்தில்!

: முதல் நிலை அதிகாரிகள் 49 பேர். இவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 4 பேர். பிற்படுத்தப்பட்டோர் ஒருவரும் இலர்! உயர்வகுப்பாரோ 45 பேர்!

: இரண்டாம் நிலை அதிகாரிகள் 162 பேர். இவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 24 பேர். பிற்படுத்தப் பட்டோர் ஒருவரும் இலர்! உயர்வகுப்பாரோ 138 பேர்!

: மூன்றும் நிலை, நான்காம் நிலை அதிகாரிகள் 96 பேர். இவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 19 பேர். பிற்படுத்தப்பட்டோர் ஒருவரும் இலர்! உயர் வகுப்பாரோ 77 பேர்!

இங்கு நாம் நினைவு கொள்ள வேண்டியவை: ! ! !

1: இந்தியா விடுதலை பெற்று 35 ஆண்டுகள் கழிந்து விட்டன!

2: எல்லோரும் இந்நாட்டு மன்னர் !!

3. இந்த நாடு சாதி சமய வேறுபாடற்ற சமநிலைக் குமுகாய அமைப்புடையது !!!......

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் நடைமுறையில் சில 'சரிக்கட்டல்' களைச் செய்துதான் சமையல் நடுவத்தைச் செயல்படுத்த வேண்டியுள்ளது. எனவே ஆசிரியர்கள் திணறுகிறார்கள். திண்டாடுகிறார்கள்.

எனவே தான்,

'கண்ட பணியைக் கொடுக்காதே, கல்விப் பணியைக் கெடுக்காதே' எனக்குரல் கொடுப்பதுடன் மட்டுமல்லாமல் செயல்பட மறுத்துத் தன்னையும் விடுவித்துக் கொள்ள விழைகிறார்கள்.

அரசின் அச்சுறுத்தல்கள்:

உள்ளூரில் குடியில்லை. இக்காரணத்தைச் சொல்லியே அரசு வெகுகாலமாக அச்சுறுத்தி வருகிறது. பெருநகர்களில் குடியிருந்தால் நகர எல்லை முழுவதும் உள்ளூர் என்றாகி விடுகிறது. சிற்றூரில் (கிராமத்தில்) குடியிருந்தால் ஓரிருகல் தொலைவே வெளியூர் ஆகிறது. இது போக்குவரத்து வசதியில்லாத காலத்தில் வெள்ளையரால் கொண்டு வரப்பட்ட நெறி ஆனால் குடியிருக்கக் குடியிருப்பும் கட்டிக் கொடுக்காது. 'உள்ளூரில் குடியிரு' என ஆணையிடுவது செங்கோல் அரசிற்கு அழகன்று. இத்தகு பத்தாம் பசலித் தனமான சட்டங்களை வைத்துக் கொண்டு அரசு அச்சுறுத்திப் பணிய வைக்க நினைக்கின்றது.

தீர்வு : ஊட்ட உணவு தேவையில்லை என்பது ஆசிரியரின் எண்ணமன்று. அதைப் பள்ளியிலிருந்து எடுத்துக் குமுகாய நலத்துறையிடம் விட்டுச் செயல்படுத்த வேண்டும் மேலும் பாலூட்டும் தாய்மார், சூலுற்ற பெண்டிர், ஏதிலியர், முதியோர், குழந்தைகள் என அனைவருக்குமே அங்கு உணவளிக்கலாம்.

ஏன் சோவியத்து நாட்டில் உள்ளது போல் ஆசிரியருக்குக் கூட அங்கு உணவு பரிமாறலாம். எனவே அரசு மேற்கண்ட வகையில் சிந்திக்க, மக்களே நீங்கள் சிந்தியுங்கள். ஆசிரியர்களைக் காப்பாற்றுங்கள்.

''செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்''

—எனவே கற்றுத்தர ஆசிரியருக்குச் சற்று வழிவிடுங்கள்.

—இரா. ஈழத்தரசு

பல்லவன் பார்க்காத சாலை

பல்லவனுக்காகக் காத்திருந்து 15 நிமையங்கள் விரைந்தன. பல்லவன் சோர்வுடன் வந்து நின்றான். நானும் ஏறி அமர்ந்தேன் நடத்துனரிடம பெரியார் சாலை' என்று கூறி, ஒரு உருபாவை நீட்டினேன்

'என்ன ?' என்று திருப்பிக் கேட்டார் நடத்துனர். இது எனக்குப் புதியதன்று! ஏனெனில் இரண்டு, மூன்று முறை, நிறுத்தத்தைத் திருப்பித் திருப்பிக் கூறிய பின்தான் ஒவ்வொரு முறையும் 'சீட்டு' வாங்குவேன். ஆகையால், மறுபடியும் 'பெரியார் சாலை' என்று அழுத்தமாகக் கூறினேன்

உடனே, நடத்துனர் '' பெரியார் ரோடா? '' என்றார்

'இல்லை 'சாலை' என்றேன்.

நடத்துனர், 'ஊம்! அதுதான் ரோடு' என்றார்.

'ஏன், சாலை என்றால் புரியாதா?' என்று கேட்டேன். அதற்கு அவர் 'பெரியார் ரோடு'என்று தான் போட்டிருக்கிறது! என்றார்.

நானும் தயங்காது, 'சாலை என்றும் போட்டிருக்கிறதே' என்று கூறி 'இயல்பாகப் புரியக் கூடிய 'சாலை' என்ற சொல்லைக்கூட மாற்றி 'ரோடு' என்று கூறும் நீங்கள், தமிழரில்லையா' என்று அவரது உணர்வைக் கிளறினேன்.

நடத்துனர் உடனே, 'என்னை மன்னித்து விடுங்கம்மா' தெரியாமல் கூறிவிட்டேன்! என்றார்.

'தெரியாமல் தாயை மறந்து விடாதீர்கள்' என்று சற்று சூடாகவே கூறிவிட்டு, நிறுத்தம் வந்ததும், இறங்கி நடந்தேன்.

'' கொடி ''

அன்பர்கள் கவனிக்க....

சிறப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம். வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் முன் கூட்டி இசைவு பெற்று வரவும்.

—அமைச்சர்

உ. த. மு. க. செய்திகள் !

1. பெரியார் மாவட்ட உ. த. மு. க., ஈரோடு. தொடக்க விழா தொடர்பான செய்தி!

அன்பரீர்!

உலகில் மிகவும் பரந்து பட்டு வாழும் இனம் சீன இனம். அதற்கு அடுத்து உலகில் பரவி வாழ்வது தமிழினம். நம் இனம் பல வகையான அழிவுச் சூழல்களால் தாக்கப்பட்டு இன்று அழிக்கப்படுகின்றது. பர்மா, இலங்கை, மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும் விரட்டி அடிக்கப்பட்டு நாடோடிகளாய் அல்லல்பட்டு ஆற்றுது துன்பம் உறுகின்றது என்பதை நாம் அறிவோம்.

இந்த இழிநிலைகளை அகற்றி வீழ்ந்து வரும் தமிழ் இனத்தைக் காக்க வேண்டியது. நம் தலையாய கடமை. நம் தமிழின மானத்தைக்காத்து, உலகில் உரிமை பெற்ற பிற இனங்களோடு நம் தமிழ் இனமும் சமநிலை பெற, உலகத் தமிழ் இனத்தை ஒன்று கூட்டுவது காலத்தின் கட்டாயமாகும். எனவே மிகவும் ஆழ்ந்து சிந்தித்து இன மேம்பாடு கருதி, உ. த. மு. க. வின் ஏழு உயர்ந்த கொள்கைகளுக்காக இந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் 7—11—81 அன்று சென்னையில் **பாவலரேறு பெருஞ்சித்திரனாரை** முதல்வராகக் கொண்டு துவக்கப்பட்டது. இவ்வியக்கம் இன்று பெரியார் மாவட்டத்திலும் செயல்படத் தொடங்குவதால், தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் கட்சி சாதி, சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு எங்கள் உழைப்பிற்கு உறுதுணையாக நிற்கும்படி அன்புடன் அழைக்கிறோம.

இன்னணம்,

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்
பெரியார் மாவட்டம்
ஈரோடு.

பெரியார் மாவட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க விழா குறித்துக் கலந்துரையாட ஈரோடு வட்ட உ. த. மு. க. தலைவர் புலவர் தி. மு அரசமாணிக்கம் இல்லத்தில் பவானி, புலவர். பொதிகைச் செல்வன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'பாவலரேறு ஐயா' அவர்கள் குறிப்பிட்ட மார்ச் 13-இல் தொடக்கவிழா கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது.

தொடக்க விழாவில் பதின்கவன நிகழ்ச்சி, கருத்தரங்கம், பட்டிமன்றம் போன்றவற்றைச் சிறப்புற நடாத்த தமிழறிஞர்களை அழைப்பதென முடிவு செய்யப்பட்டது. விழாவுக்கு உலகத்தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் '**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**' அவர்களை அழைப்பதென ஒருமுகமாக ஒப்புக் கொள்ளப்பட்டது. கருத்தரங்குக்கான ஒரு சில தலைப்புகளும் தேர்ந்தெடுக்கப்பெற்றன. அடுத்து, பெரியார் மாவட்ட உ. த. மு. க. தலைவராக பேராசிரியர் உ. பாலசுப்பிரமணியம் க. மு. அவர்களையும், மாவட்டச்செயலராக புலவர் அரங்கராசரத்தினம் க. மு. அவர்களையும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்டு முதல்வர் அவர்களுக்கு அனுப்பி வைத்து ஒப்புதல் பெற்றுக் கொள்ளலாமென முடிவு செய்யப்பட்டது.

தொடக்க விழாவின் இறுதியில் கழக முதல்வர் 'பாவலரேறு பெருஞ்சித்திரனார்' அவர்களின் கொள்கை விளக்கச் சிறப்புப் பேருரை நிகழும்.

மற்றும் அறிக்கைகளையும், பற்று முறிச் சீட்டுகளையும், வராத வட்டங்களுக்கு அனுப்பி வைத்துத் தொடக்க விழாவுக்கான அனைத்து ஏறபாடுகளையும் செய்வதென முடிவு செய்யப்படடது.

புலவர்.
-தி. மு. இராசமாணிக்கம்
ஈரோடு வட்டத்தலைவர்
உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்.

2. திருச்சி, திருவெறும்பூர் வட்ட உ. த. மு. க. தொடக்க விழா இனிது நடந்தது!

22—2—83 செவ்வாய்க் கிழமையன்று மாலை 7 மணி அளவில் திருவெறும்பூர் வட்ட உ.த.மு.க. தொடக்க விழா திருவெறும்பூர் அண்ணா சீரணி அரங்கில் (பாவாணர் அரங்கில்) பெரும் சீருஞ் சிறப்புமாக நடைபெற்றது. அரங்கின் முன்பகுதியில் உ.த.மு.க. கொடிகள் அணியணியாக அழகுறக் கட்டப் பெற்றுப் பார்வையாளர்களுக்கு மிகவும் ஈர்ப்பாக இருந்தன. தொடக்கத்தில் இசையறிஞர் சிரிபதி பாடிய உதமுக இயக்கப் பாடலகள் ஒலிபரப்பப்பெற்றன. திரு. சி. இமயவரம்பன் தலைமையேற்க, திரு. குழந்தை ஈகவரன் தமிழ் வாழ்த்துப் பாட, கூட்டம் தொடங்கப் பெற்றது. வட்டச் செயலர் திரு. அழகுமதியான் வரவேற்புரையாற்றினார். பின்னர், திருச்சி மாவட்டப் பொருளர் திரு. குழந்தை ஈகவரசன், செயலர் திரு. நாரா. மகிழ்நன், திரு. சு. இளங்கோவன், திரு. பாண்டியன் கடுங்கோ, திரு. குமரப்பனார் (உரிமையாளர்-பொத்தக இளங்கோ நிலையம்) ஆகியோர் பேசினார்கள். அனைவரின் உரைக்குப் பின்னர், கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 4 (நான்கு) மணி நேரம், நீண்டதொரு சிறப்புரையாற்றினார்கள். திருவெறும்பூரிலுள்ள பெரும் பாலான தொழிலாளர்களும், பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும் ஒன்றுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு கூட்டத்தை இறுதிவரையும் அமைதியாகக்கேட்டு உணவு பெற்றது குறிப்பிடத்தக்கது. இறுதியில் உ. த. மு. க. ஒன்றிணைப்புப் பாடல் பாட, திரு. இராமலிங்கம் நன்றியுரையாற்றக் கூட்டம் இனிதே முடிந்தது.

3. சங்கரன் கோயில், கடையநல்லூர் ஆகிய இடங்களில் நடந்த கழக முதல்வரின் நிகழ்ச்சிகள்!

சங்கரன் கோயில் நிகழ்ச்சி

நெல்லை நிகழ்ச்சிகளை முடித்து விட்டு பாவலரேறு அவர்கள் சங்கரன் கோயிலுக்குச் சுறவம் 5 (17-2-83) மாலை 5 மணியளவில் வந்து சேர்ந்தார். அவரை அன்புடன் உ. த. மு. க. நெல்லை (வடக்கு) மாவட்டச் செயலர் தமிழன்பன் பேருந்து நிலையத்தில் வரவேற்றார். ஐயா அவர்கள், சங்கரன் கோயில் வழிப் போக்கர் விடுதியில சற்று இளைப்பாறிய பின்னர் மொழிஞாயிறு பாவாணர் பேரவை தொடக்க விழாவில் கலந்து கொண்டார். விழாவிற்குப் பேரா. மு.செ. அறிவரசன் (தேவர் கல்லூரி, மேல நீலித நல்லூர்) தலைமை தாங்கினார். விழா தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தினை திருச்சி மாவட்ட உ.த.மு.க. பொருளர் ஈகவரசன் பாடினார். சங்கரன் கோவில் மேனாள் நகர மன்றத் தலைவரும் கொல்லை மாவட்டப் பகுத்தறிவாளர் கழகத்தலைவருமான ஆ. பழனிச்சாமி வணி. இ. வரவேற்புரை நிகழ்த்தினார். பேரவையினைத் தொடங்கி வைத்துப் பாவலரேறு அவர்கள், பாவாணர் அருமை பெருமையினையும், தமிழ் மொழிக்கு அவர் ஆற்றிய தொண்டினையும் பற்றி ஓர் அரிய உரையினை நிகழ்த்தினார்கள். விழாவினில் பாவாணர், மறைமலையடிகள் திரு.வி.க ஆகியோரின் திருவுருவப் படங்களை முறையே பாவலரேறு அவர்கள், தேவர் கல்லூரி முதல்வரும் தாளாளருமான பேரா. பொன்னையா அவர்கள் (கமு. ச. இ.), ப. லெ. சித்திரபுத்திரனார் அவர்கள் திறந்து வைத்தனர். பேரவையினை வாழ்த்தி திரு. பொன் கதிர் தியாகராசன் க. மு. கல். இ; த. கரிகாலன் உ. த. மு. க. நெல்லை (வ) மா.வ. தலைவர்) புலவர் படிக்கராம், புலவர் ஆ. முத்துராமலிங்கம், க.மு. பேரா. பொன்னையா ஆகியோர் உரையாற்றினர். பரமபால் பாண்டியன் நன்றியுரைக்குப்பின், தமிழர் ஒன்றிணைப்புப் பாடலை அ. தமிழன்பன் பாட, விழா இனிதே இரவு 1-00 மணியளவில் நிறைவுற்றது. அன்றிரவே பாவலரேறு அவர்கள், கடையநல்லூர் சென்று விட்டார்.

கடையநல்லூர் நிகழ்ச்சி

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் நெல்லை (வடக்கு) மாவட்டக் கடையநல்லூர் கிளை, தமிழ்த் தென்றல் திரு. வி. க. நூற்றுண்டு விழாவினை சுறவம் 6 (18-2-83) அன்று சிறப்புடன் கொண்டாடியது. பொது மேடையில் அமைக்கப்பட்ட விழாவினில் பாவலரேறு அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். திருசேக்கிழார் வ. கணேசன் அவர்கள் தலைமையேற்றார். மாவட்டச் செயலர் தமிழன்பன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். திரு இளமுருகன் வரவேற்புரை வாசித்தார். விழாவில் பெரியகுளம் உ. த. மு. க. வட்டச் செயலர் புலவர் திரு வேலவன் உ. த. மு க. நெல்லை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்கள் த. கரிகாலன், அ. தமிழன்பன், பாண்டியன் மற்றும் புலவர். இராசகோபாலன், புலவர். பழனியப்பன், க.மு., பேரா மு.செ. அறிவரசன் க.மு. ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். இறுதியாகப் பாவலரேறு அவர்கள், திரு.வி.க.வின் குணநலன்களைப் பற்றியும், தமிழின ஒற்றுமை பற்றியும் பேருரையாற்றினர்கள். திரு. மு. பழனி நன்றி நவின்றார். தமிழர் ஒன்றிணைப்புப் பாடலுக்குப் பின்னர், நிகழ்ச்சி இரவு 12-30 மணியளவில் நிறைவுற்றது. பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள், தமிழினத்தை மீட்கப் பாவலரேறு ஒருவரால் தான் முடியும் என்று பேசிக்கொண்டு சென்றது காதுகளில் விழுந்தது. அடிக்கடி ஐயா அவர்கள் இது போன்ற பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு மக்களை அறிவு பெறச் செய்தல் வேண்டுமென, நிகழ்ச்சியமைப்பாளர்களிடம் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

பிழைக்கு வருந்துகிறோம்

'தமிழ் நிலம்' இதழ் எண் 6-இல் வெளிவந்த 'தமிழ் கூறும் நெஞ்சங்கள் எழுந்து வாரீர்' என்னும் பாடல் 'சடையூர் மணிமாறன்' எழுதியதாக அச்சிடப் பெற்றுள்ளது. ஆனால், அப்பாடலை எழுதியவர் 'ப. எழில்வாணன்' ஆவார். எப்படியோ நேர்ந்தவிட்ட இத்தவற்றுக்குப் பெரிதும் வருந்துகிறோம். அன்பர்கள் திருத்திப் படிக்கக் கேட்டுக் கொள்கின்றோம்.

—அமைச்சர்.

தமிழ்நிலம் முகவர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

இவ்விதழ்க் கணக்கு வரை தங்களின் நிலுவைத் தொகையை, அருள் கூர்ந்து விரைந்து அனுப்பி வைத்துத் தொண்டுக்குத் துணை நிற்குமாறு வேண்டுகின்றோம்.

—அமைச்சர்.

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர்.
நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்
'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.